
GOKULAM

கோகுலம்

அக்டோபர் 2005 • பக்கங்கள்   குழந்தைகளின் குதூகலம்!



மடகாஸ்கர் சொல்லும் செய்தி என்ன?

கோகுலம்

(கல்கி நிறுவன வெளியீடு)

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் ஆசிரியர் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிடுபவர் :

கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32

முதன்மை உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22251522 / 22250623
22251324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :

உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-

வெளிநாடு
(விமானத்தபால்) :
ஒரு வருடம் : **24 யு.எஸ். டாலர்**
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!

அக்டோபர் 2005 ❖ மலர் : 23 ❖ இதழ் : 9

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்

அன்புள்ள உங்களுக்கு...



காந்தி ஜெயந்தி!

ஹாய் ஃபிரெண்ட்ஸ்,

அக்டோபர் - 2 காந்தி ஜெயந்தி. நம் நாட்டு விடுதலைக்காக, அஹிம்சை வழியில் போராடிய எளிய மனிதர் காந்தியடிகள். அவரது பிறந்த நாளை இன்னொரு விடுமுறை நாளாகக் கருதாதீர்கள். காந்தியைப் பற்றிய விஷயங்களைத் தேடிப் படியுங்கள். அல்லது பெரியவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அவரது வாழ்க்கையைப் பாடமாக எடுத்துக் கொண்டு நாமும் ஏதாவது ஒரு விதத்தில் அவரைப் பின்பற்ற முடியுமா என்று யோசித்துப் பாருங்கள். இதுவே நாம் அவருக்குச் செய்யும் மரியாதையாக இருக்கும்.

இதுமட்டுமல்ல, சுதந்திர தினம், குடியரசு தினம், பண்டிகைகள் போன்றவற்றையும்கூட காரண காரியங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். நம் நாடு, நம் தலைவர்கள், நம் புராணங்கள் போன்றவற்றை நாம் தெரிந்து வைத்துக் கொண்டால்தானே நாம் வருங்கால சந்ததிக்குச் சொல்ல முடியும்! நம் நாட்டின் பெருமையை நிலை நிறுத்த முடியும்.

கோகுலத்தைப் பற்றிய உங்களது கருத்துகளை நீங்கள் எழுதும் கடிதங்களால் எங்களுக்கு ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் ஒட்டு மொத்தமான உங்கள் கருத்துகளை அறிந்து கொண்டால் தானே பத்திரிகையின் வளர்ச்சிக்கு உதவும்; உங்களையும் பூரணமாகத் திருப்தி படுத்த முடியும். சிரமம் பார்க்காமல் 48-50ஆம் பக்கங்களில் இருக்கும் கருத்துப் படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்பி வையுங்கள். பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

உடனே அனுப்பினால் தான் பரிசு பெறும் வாய்ப்பு கிடைக்கும்.

அன்புடன்

உங்கள் கோகு

பரிசு ஜோக்ஸ்

"பருப்பு விலை இம்புட்டு சொல் றீங்க, இதுல என்ன விஷேசம்?"

''அதில உயிர் இருக்கு... உயிர்''

''ஓ! அதான் புழு, வண்டெல் லாம் இருக்கா!''

- சி.செ. ரங்கசாமி, எடப்பாடி





''கையில காசில்லாம ஏன் கைரேகை பார்த்தே?''

''இதை முதல்லேயே உன் ஜோசியத்தாலே கண்டுபிடிக்க முடியலே. நீ எப்படி என் எதிர் காலத்தைச் சொல்லுவே?''

- பி.சரத்குமார், ஆலாங்கொம்பு

எதுக்கு நன்றி விழா?

''அம்மா, எங்க வகுப்பில் ஒரு பையன் கீழே விழுந்துட்டான். எல்லோரும் சிரிச்சாங்க. நான் மட்டும் அழுதேன்.''

''உனக்கு ரொம்பத்தான் இரக்க குணம்!''

''விழுந்ததே நான்தான்!''

- காயத்ரி முத்துக்கிருஷ்ணன், நெய்வேலி





''ரசிகர்கள் கூடி அந்த டைரக்டருக்கு விழா கொண் டாடுறாங்க. ஏதாவது புதுப்படம் ரிலீஸா?''

''இந்தத் தீபாவளிக்கு ஏதும் புதுப் படம் எடுத்து ரிலீஸ் பண்ணாம அவங்களை நிம் மதியா இருக்க விட்டதுக்காக நன்றி விழா நடத்துறாங்க!''

- தனசேகரன், ஆலாங்கொம்பு



டேவிட் வீட்டை நோக்கி வேகமாய் நடைபோட்டேன்.

பொழுதுவிடிந்தால், கிறிஸ்துமஸ் பண்டிகை. பல வீடுகள் முன்பும், பல்புகள் புதைக்கப்பட்ட நட்சத்திரங்கள் ஜொலித்துக் கொண்டிருந்தன.

தூங்கிக் கொண்டிருக்க வேண்டுமென இயேசுவை வேண்டிக் கொண்டேன். பின்னர் எப்படி இந்த பார்சலை யாருக்கும் தெரியாமல் கிறிஸ்துமஸ் தாத்தாவாய் கொண்டு போய் வைக்க முடியும்?



டேவிட் என் வகுப்பு மாணவன். வறுமைக்கு அகப்பட்ட குடும்பம்.

ஒரு டிரவுசர், சட்டை, ஸ்வீட்ஸ் அடங்கிய அந்தப் பரிசு பார்சல் என் கையில் கனத்தது. இந்த வேளையில் டேவிட் ஆழ்ந்து

நேற்று வகுப்பில் நிகழ்ந்த விஷயம். என் சிந்தையில் வந்து நின்றது.

மறுநாள் கிறிஸ்துமஸ் என்பதால் நேற்று மதியம் 'ஒன் செக்ஷன்' பாடவேளையாக பள்ளி வைக்கப்பட்டிருந்தது.

மூன்றாம் பரிசுக் கதை

கிறிஸ்துமஸ் தாத்தா!

'ஏய், பிள்ளைகளா... நாளைக்கு யார் வீட்டிலெல்லாம் கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடப் போறீங்க?'' என்றேன்.

கிறிஸ்துமஸ் கொண்டாடும் பிள்ளைகள் என் வகுப்பில் ஐந்து பேர் இருந்தனர். அதில் டேவிட்டும் ஒருவன்.

''எங்க வீட்ல புது டிரஸ், மைசூர்பா, அல்வா, மிக்சர் எல்லாம் கிடைக்கும்'' என்று கோரஸாய் மகிழ்ச்சி தெரிவித்தனர் ஜான்சன், ஜோசப், ஸ்டெல்லா, ஜெஸி நால்வரும்.

ஆனால் டேவிட் மட்டும் எந்த ரியாக்ஷனும் காட்டாமல் பாடப் புத்தகத்தில் பார்வையைப் பதித்திருந்தான்.

''ஏன் ஒரு மாதிரியா இருக்கே டேவிட்?''


''சும்மாதான் ஸார்.''

''பண்டிகைக்குப் புது டிரஸ் எடுக்கலையா?''

''..........''

''ஏன் பேசாம இருக்கே... பதில் பேசுப்பா''

டேவிட் அமைதியாய் தலை



குனிந்து கொண்டான். அவன் கண்கள் கலங்கிவிட்டன.

"புது டிரஸ் கிடைக்கணும்னு இயேசுவை மனசுக்குள்ள வேண்டிக்க, கிறஸ்துமஸ் தாத்தா உனக்குப் புது டிரஸ், பலகாரமெல்லாம் ராத்திரியில உனக்குத் தெரியாம கொண்டு வந்து வச்சுட்டுப் போவாரு..."

தெரு நாய் ஒன்றின் ஊளைச் சத்தம் என் சிந்தையைக் கலைத்தது.

இதோ டேவிட்டுக்கு கிறிஸ்துமஸ் தாத்தா அளிக்கப் போகும் பரிசு என் கையில். நான்தான் இப்போது கிறிஸ்துமஸ் தாத்தா.

வீட்டை நெருங்கிய நான் திகைத்தேன். என் திகைப்பிற்கு காரணம் டேவிட் வாசற்படியில் ஏற்கனவே ஒரு பரிசு பார்சல்!

என்னிடமுள்ள பார்சலை என்ன செய்வது? டேவிட்டிற்கு எப்படியோ 'டிரெஸ்' கிடைத்துவிட்டது. பண்டிகையை மகிழ்ச்சியோடு கொண்டாடுவான்.

நான் வைத்திருக்கும் பரிசு பார்சலை இன்னொரு ஏழைச் சிறுவனுக்குக் கொடுத்து உதவினால் என்ன?

டேவிட் வீட்டை விட்டு விலகி வேகமாய் நடக்கத் தொடங்கினேன்.

சட்டென அந்தச் சத்தம் என்னை நிறுத்தியது. ஒரு சிறு பிள்ளையின் முனகல் சத்தம்தான் அது.

இருட்டுக்குப் பழகிவிட்ட என் கண்கள் அவனை அடையாளம் காட்டின. கிறிஸ்டோபர்.

"ஸார்...?" அவன் குரல் குழறியது.

"என்னடா இது, இந்த நடுச் சாமத்துல இங்கே நின்னு அழுதுக்கிட்டிருக்கே?" அதிர்ச்சியும் கோபமுமாய் அவனைப் பார்த்தேன்.

"ஸார்... கிறிஸ்துமஸ்க்கு எல்லார் வீட்லயும் டிரஸ்செல்லாம் எடுத்துருக்காங்க. ஆனா என் வீட்ல அப்பா எனக்கு டிரஸ் எடுக்கல. கேட்டதுக்கு அடிச்சுப் போட்டுட்டாரு. அதான் இங்கே வந்துட்டேன்" என்று சொன்னவன் 'ஓ'வென பெருங்குரலில் அழ ஆரம்பித்தான்.

உடனே கையிலிருந்த பார்சலை அவன் கையில் திணித்தேன்.

"ஸார்" என்றான் வியப்பும் பயமுமாய்.

"இதுல புது டிரஸ்சும் பலகாரங்களும் இருக்கு. வீட்டுக்குக் கொண்டு போய் பண்டிகையைச் சந்தோஷமா கொண்டாடு."

"ஐயோ, வேண்டாம் ஸார்... ஏதுன்னு கேட்டு என் அப்பா அடிப்பார்."

"கிறிஸ்துமஸ் தாத்தா கொடுத்

யார் இந்தப் பிரபலம்?



1992ல் பாரத ரத்னா விருது பெற்றவர்.

மக்சேசே விருதும் பெற்றவர்.

தாருன்னு சொல்லு. அப்பா அடிக்க மாட்டாரு.''

திங்கட்கிழமை பள்ளி திறந்து வகுப்புக்குள் நுழைந்தேன். அந்த நான்கு பிள்ளைகளோடு டேவிட்டும் புது டிரஸ் போட்டிருந்தான். அவனை அழைத்தேன்.

''என்னடா நான் சொன்னபடி கிறிஸ்துமஸ் தாத்தா புது டிரஸ் கொடுத்துட்டுப் போயிருக்கார் போல?''

''இல்ல ஸார்... என் அப்பா இரு நூறு ரூபா கொடுத்து வாங்கிய டிரஸ்.''

நான் திடுக்கிட்டேன். அப்படியென்றால் வாசற்படியில் இருந்த பார்சல்..?

''நான்தான் ஸார் வாசற்படியில் அந்தப் பெட்டிய வச்சேன்'' அவன் சொல்ல மேலும் அதிர்ந்தேன்.

''கிறிஸ்துமஸ் தாத்தா வந்து டிரஸ் கொடுப்பாருன்னு சொன்னீங்க. அம்மாக்கிட்ட வந்து அதப் பத்தி கேட்டேன். 'உன் வாத்தியார் கிறிஸ்துமஸ் தாத்தாவா வந்து உதவினாத்தான் உண்டு'ன்னு சொன்னாங்க.

''அப்பத்தான் நெனச்சேன். ஒருவேளை நீங்கதான் டிரஸ் எடுத்துக்கிட்டு கிறிஸ்துமஸ் தாத்தாவா வந்துட்டுப் போகப் போறீங்களோன்னு... அப்பாதான் எனக்குப் புது டிரஸ் எடுத்துட்டு வந்துட்டாரே. ஒருவேளை ஸாரும் புது டிரஸ் எடுத்துட்டு வந்து வச்சுட்டுப் போயிட்டா என்ன பண்றதுன்னு எண்ணம் வந்துச்சு...

''பண்டிகை டிரஸ் கிடைக்காம இருக்கிற ஓர் ஏழைப் பையனுக்கு ஸாரோட பரிசு கிடைக்கட்டுமேனு ஒரு திட்டம் போட்டேன். என் புது டிரஸ் இருந்த கவரை வாசப்படியில் வச்சேன்.''



''ஏன் சார், உங்க கதையோட ஸ்கேலையும் கொடுத்திருக்கீங்க...?''

''என் கதையோட ஆழத்தைப் பார்க்கணும் அதற்காகத்தான்!''

- டி.சாலமன், ஒன்பதாம் வகுப்பு, அழகிரி சுரேஷ் அரசு உயர்நிலைப் பள்ளி, ஆலாங்கொம்பு

நான் அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன்.


''என் நம்பிக்கை வீண் போகல ஸார்... நீங்களும் தவறாம வந்தீங்க... வாசப்படியில நான் வச்ச பெட்டியைப் பார்த்துட்டு என் எண்ணப்படியே நீங்க கொண்டு வந்த பார்சலைத் திருப்பிக் கொண்டுக்கிட்டு போயிட்டீங்க... நிச்சயம் அது ஓர் ஏழைப் பையனுக்கு கொடுத்திருப்பீங்கன்னு நம்புறேன் ஸார். இருக்கிறவன் மேலும் மேலும் வாங்கிச் சேர்த்து சந்தோஷப்பட்டுக்கிறதைவிட, இல்லாதவனுக்குக் கொடுத்து அவன் படுற சந்தோஷத்தைப் பார்த்து சந்தோஷப்படுறது எவ்வளவு பெரிய விஷயம்? நான் இந்த இடத்துல அப்படி செய்யாம விட்டிருந்தா உங்க மாணவன்னு சொல்லிக்க எனக்கென்ன ஸார் தகுதி?.''

அவனை வாரி அணைத்துக் கொண்டு நான் சொன்னேன், ''இதோ என் பிடியில் கிறிஸ்துமஸ் தாத்தா!''

-சு.அபிராமி, ஐந்தாம் வகுப்பு, ஊ.ஒ.து.பள்ளி, காயக்காடு









ஹாலிவுட்டிலிருந்து குழந்தைகளுக்கான திரைப் படங்கள் அவ்வப்போது வெளி வந்து எல்லோரையும் மகிழ்ச்சி படுத்துகின்றன.

அப்படி ஓர் அனிமேஷன் நகைச்சுவைத் திரைப்படம் தான் 'மடகாஸ்கர்'.

வெற்றிகரமாக ஓடிக் கொண் டிருக்கும் இந்தப் படத்தில் என்ன தான் இருக்கிறது?

நியூயார்க்கில் சென்ட்ரல் பார்க் மிருகக் காட்சி சாலையில் அலெக்ஸ் என்ற சிங்கம் இருக் கிறது. காட்டில் மட்டுமின்றி மிருகக் காட்சி சாலையிலும் சிங்கம்தான் ராஜா!

வரிக்குதிரை மார்ட்டி, மெல்மன் ஒட்டகச்சிவிங்கி, குளோரியா நீர் யானைதான் அலெக்ஸ்க்கு நெருங்கிய நண்பர்கள்.

உணவு தேடி அலையாமல் வேளாவேலைக்குச் சாப்பிடுவது, தூங்குவது மற்றும் தங்களைப் பார்க்க வரும் மனிதர்களுக்கு காட்சி தருவது தான் இவற்றின் வேலை.

மடகாஸ்கர் சொல்லும்



அன்று மார்ட்டியின் பிறந்த நாள். மார்ட்டி தனக்கு ஓர் ஆசையிருப்பதாகக் கூறியது. நண்பர்கள் ஆர்வத்துடன் 'என்ன ஆசை?' என்று கேட்டன.

"நம்முடைய பூர்வீகம் காடு தானே. ஆனால் நாமெல்லாம் பிறந்ததிலிருந்து இந்த மிருகக் காட்சி சாலையில்தானே வசிக்கிறோம். ஒரு தடவை நாம் காட்டைப் போய் பார்த்து விட்டு வந்தால் என்ன?'' என்றது மார்ட்டி.

ஆனால் மார்ட்டியின் இந்த ஆசையை மற்ற நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. நண்பர்கள் தூங்கும் நேரம் பெங்குவின்களின் உதவியுடன் மார்ட்டி தப்பிச் சென்று விடுகிறது.

மார்ட்டியைத் தேடி நண்பர்கள் கிளம்பிச் செல்கின்றன.





சில சோதனைகளைச் சந்தித்து நண்பர்கள் மார்ட்டியைக் கண்டு பிடிக்கின்றன. அப்போது போலீஸாரால் இவை அனைத்தும் கைது செய்யப்பட்டு, மீண்டும் மிருகக் காட்சி சாலைக்கே கொண்டுவரப்படுகின்றன.

அதன் பிறகு, மிருகக் காட்சி சாலையில் உள்ள அனைத்து பிராணிகளும் ஆப்பிரிக்காவுக்கு கப்பலில் அனுப்பப்படுகின்றன. கப்பலில் மற்ற பிராணிகள் செய்யும் அமர்க்களத்தால் நான்கு நண்பர்களும் பெட்டியோடு கடலில் விழுகின்றன்.

பெட்டிகள் கரை சேர்ந்த இடம் அழகிய தீவான மடகாஸ்கர்.

மிருகக் காட்சி சாலையிலேயே பிறந்து, வளர்ந்த நண்பர்களுக்கு காட்டு வாழ்க்கை அச்சத்தைத் தருகிறது. வேட்டையாடி பழக்கமே இல்லாத அலெக்ஸ் உணவுக்காக தன் நண்பர்களையே வேட்டையாட துரத்துகிறது. பிறகு தன் தவறை உணர்ந்து அலெக்ஸ் நண்பர்களைத் தேடிக் கண்டுபிடிக்கிறது.

காட்டு வாழ்க்கை பிடிக்காமல் நண்பர்கள் மீண்டும் மிருகக் காட்சி சாலைக்கே திரும்புகின்றன!

படம் முழுவதும் நகைச் சுவைக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. ஆங்காங்கே கொஞ்சம் சென்ட்டிமெண்ட்ஸ் காட்சிகளும் உண்டு. ஷ்ரெக், ஷார்க் டேல் போன்ற அனிமேஷன் படங்களைத் தயாரித்த ட்ரீம்ஒர்க்ஸ் பிக்சர்ஸிலிருந்து இந்தப் படமும் தயாரிக்கப்பட்டிருக்கிறது.


பொதுவாக காட்டிலிருந்து மிருகக் காட்சி சாலைக்கு அனுப்பப்படும் பிராணிகளைத் தான் பார்த்திருப்போம். இந்தக் கதையில் முற்றிலும் வித்தியாசமாக மிருகக் காட்சி சாலையிலிருந்து பிராணிகள் காட்டுக்குச் செல்கின்றன. தன் நண்பர்களின் உயிருக்கே கேடு விளைவிக்கும் சிங்கத்தின் இயல்பை வெளிக் கொண்டு வரும் காட்டு வாழ்க்கை பிடிக்காமல், அன்பை பிரதானமாகக் கருதி மிருகக் காட்சி சாலைக்கே வந்து விடுகின்றன பிராணிகள். சுவையான கற்பனை! நட்புக்காக இயல்பையும் மாற்றிக் கொள்ளலாம் என்கிறது கதை! ஒண்ணேகால் மணி நேரம் ஓடும் இப்படத்தைச் சிறியவர்களும் பெரியவர்களும் விரும்பிப் பார்ப்பதில் ஆச்சர்யமில்லை! ●



"எல்லா பல்லும் நல்லா ஆடுது. என்ன செய்யலாம்?"

"நல்ல நாளா பார்த்து அரங்கேற்றம் பண்ணிடலாம்!"

– மிதுன்ராஜ், ஒன்பதாம் வகுப்பு, அழகிரி சுரேஷ் அ.உ.நி. பள்ளி, ஆலாங்கொம்பு


வண்ணம்
தீட்டுங்கள்!

மாவீரன்!

கதை : புலேந்திரன்

படம் : பிள்ளை




நாகம் மாவீரனைத் துரத்தியது.
உன்னை விடமாட் டேன்.
உதவி... உதவி...
எதிரில் வந்தார் தலைவர் கீரி -
ஏன் ஓடி வர்றே?
நா... நா... நாகப் பாம்பு
நாகா, எச்சரிக்கிறேன் போய் விடு.
அவனைக் கடிக்காமல் விடமாட் டேன்.
தலைவர் கீரியும் நாகமும் சண்டையிட்டன.
சண்டையில் தோற்ற நாகம் உயிர் பிழைத்தால் போதும் என்று ஓடியது.
உடம்பு பெரிசா இருந்தால் மட்டும் வீரனாக முடி யாதுங்கறதைப் புரிஞ் சிக்கிட்டேன். நன்றி.
இனி இந்தப் பக் கம் வரமாட் டேன்.





திறக்க முடியவில்லை!

நான் என் பாட்டியின் மீது பேரன்பு உடையவள். என் பாட்டி என் குறும்புத்தனத்தின் காரண மாக என் மாமா வீட்டிற்குச் செல்வதாய்க் கூறிவிட்டு குளிக் கச் சென்றார். நான் குளியலறைக் கதவுக்குத் தாழ்ப்பாள் போட்டு விட்டு, என் பாட்டியிடம் ''நீ என்னை விட்டு இப்பொழுது எப்படி செல்வாய்?'' என்றேன். என் பாட்டி என்னைவிட்டுச் செல்லமாட்டேன் என்றும் கத வைத் திறக்குமாறும் கூறினார். கதவைத் திறக்க முடியவில்லை. நானும் ஏதேதோ செய்து பார்த் தேன். வீட்டில் அம்மாவும் இல்லை. அரை மணி நேரம் கழித்து பக்கத்து வீட்டு மாமாவை அழைத்து, திறந்தேன். அன்று முதல் பாட்டி என்னிடம் விளை யாட்டுக்குக்கூட ஊருக்குப் போவதாகச் சொல்வதில்லை!

- ஆர். கோமதி,
அ.ம.மே.நி.பள்ளி, நந்திவரம்.

ஓய்வு...

கணித ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டு இருந்தார். அடுத்தவேளை ஆசிரியர் வராத தால் அவரே தொடர்ந்து நடத்த லானார். எங்களுக்கு மிகவும் களைப்பாக இருந்ததால், அனை வரும் ஆசிரியரிடம், ''சார், சிறிது நேரம் ஓய்வு தேவை'' என்று கூறினோம். உடனே ஆசிரியர், ''நான்தான் நின்று கொண்டு பாடம் நடத்திக் கொண்டிருக் கிறேன். உட்கார்ந்து கவனிக்கும் உங்களுக்கு எதற்கு ஓய்வு?'' என்று கேட்டார். நாங்கள் உடனே, ''அதான் சார், நீங்கள் தொடர்ந்து நடத்திக் கொண்டே இருக்கிறீர்களே, உங்களுக்குத் தான் ஓய்வு கேட்டோம்'' என்று கூறினோம். ஆசிரியரும் சிரித்துக் கொண்டே வகுப்பிலிருந்து சிறிது நேரம் வெளியே சென்று விட்டு, பிறகு பாடத்தைத் தொடர்ந்தார்.

- கே.மஹாலக்ஷ்மி, திருவாரூர்

ஆறு

ஓருநாள் எங்கள் தமிழா சிரியர் 'ஆறு' தன் வரலாறு கூறு தல் என்ற தலைப்பில் சுயமாக சிந்தித்துக் கட்டுரை எழுதி





நினைவில் நின்றவை...

வருமாறு கூறினார். ஒரு மாணவன் எழுதிய கட்டுரையில், 'நான் 5க்குப் பெரியவன், 7க்குச் சின்னவன். திருப்பிப் போட்டால் 9 ஆவேன்' என்று

பத்து ரூபாய் யாருடையது?



பலவாறு எழுதியிருந்ததைப் படித்துப் பார்த்த ஆசிரியர் கோபம் மறந்து சிரித்து விட்டார். அம்மாணவன் 'ஆறு' என்றதும் '6'ஆம் எண் என்று நினைத்து எழுதிவிட்டான். அதை நினைத்து அன்று முழுவதும் வகுப்பில் சிரிப்பலைதான்!

-அ.பேச்சியப்பன், ராஜபாளையம்



தொலைத்தது யார்?

ஒரு நாள் பிரின்ஸ்பால் காலைப் பிரார்த்தனையின்போது, "பள்ளி வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட பத்து ரூபாயைத் தொலைத்தவர் அடையாளம் கூறிப் பெற்றுச் செல்லலாம்" என்று அறிவிப்புச் செய்தார். 3 மாணவர்களும் 2 மாணவியரும் பிரின்ஸ்பாலிடம் சென்று, ரூபாய்க்கு உரிமை கோரினர். ஒருவரும் சரியான அடையாளம் கூறாததால், திருப்பி அனுப்பப்பட்டனர். ஒரு மாணவி மட்டும் பிரின்ஸ்பால் அறைக்கு வெளியே நின்று, அழுது கொண்டிருந்தாள். அறையிலிருந்து வெளியே வந்த பிரின்ஸ்பாலிடம், "சார்! நோட்டு வாங்க கொடுத்த பணம்தான் தொலைஞ்சிடுச்சி; அடையாளம் தெரியலை; நாளக்கி, எங்கம்மாவ கூட்டிட்டு வர்றேன்" என்று அந்த மாணவி புலம்பினாள். உடனே திரும்பி வகுப்புக்குச் செல்லாத அவளை நம்பிய பிரின்ஸ்பால், ரூபாயை அவளுக்கே கொடுத்தனுப்பினார்!

- டி. தாமினி, திருவண்ணாமலை

ஓவியப் போட்டி முடிவுகள்

செப்டெம்பர் இதழில் 'ஹார்ன்பில்' என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஹார்ன்பில்கள் இங்கே...



முதல் பரிசு : **எஸ்.ஸ்வர்ண லக்ஷ்மி**, ஐந்தாம் வகுப்பு, பாரதி வித்யாபவன் பள்ளி, ஈரோடு

ஹார்ன்பில்



▲ இரண்டாம் பரிசு : **அ.ரட்சகன்**, மூன்றாம் வகுப்பு, ருக்மணி கண்ணன் வித்யாலயா, கோவைப்புதூர்





▶ மூன்றாம் பரிசு : எஸ்.விக்னேஷ்குமார், ஒன்பதாம் வகுப்பு, ருக்மணி கண்ணன் வித்யாலயா, கோவைப்புதூர்



▲ ஆறுதல் பரிசு : **அ.பவித்ரசெல்வி**, எட்டாம் வகுப்பு, டி.எஸ். சாரதா வித்யாலயா, கோபிச்செட்டிபாளையம்

ஆறுதல் பரிசு : **டி.ஆர்.ரெங்கதேவா**, முதல் வகுப்பு, புஷ்பலதா பள்ளி, திருநெல்வேலி ▼




அசரீரி
கதை : எம்.சிவப்பிரகாஷ், பெங்களூர்
படம் : வெங்கட்
கப்பல் ஒன்று நடுக்கடலில் பாறையின் மேல் மோதி உடைந்தது.
கப்பலில் வந்த ஒருவன் அதிர்ஷ்ட வசமாக உயிர் பிழைத்து ஒரு தீவில் ஒதுங்கினான்.
ஐயோ ஆதிவாசிகளிடம் மாட்டிக் கொண்டேனே! எப்படி தப்பிப்பது?
அப்போது அசரீரி கேட்டது.
பயப்படாதே! உனக்கு ஒன்றும் ஆகாது. ஆதிவாசி தலைவனை ஓர் அறைவிடு.
யோசிக்காமல் அசரீரி சொன்னது போலவே ஓங்கி ஓர் அறைவிட்டான்.
இப்போது நீ தொலைந்தாய்! ஹா... ஹா...!



வட, தென் அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகளில் காணப்படும் பூனைப் போலவே இருக்கும் 'ஒப்போசம்' என்ற



விலங்கு ஆபத்து நேரத்தில் வலிப்பு வந்தது போல நடித்து மூர்ச்சையாகி கிடக்கும்.

வட அமெரிக்காவில் காணப் படும் 'ரங்கூன்' என்ற விலங்கு உணவுப் பொருள் எதையும் நீரில் கழுவிய பிறகே உண்ணும்!

- விசாகன்,
இராஜபாளையம்

மனிதனின் நுரையீரல் காற்றறைகளை விரித்துப் பரப் பினால் ஒரு டென்னிஸ் கோர்ட் டின் பரப்பளவு விரியும்.

நுரையீரல் ஒருநாளில் 2 மில்லியன் லிட்டர் காற்றை உள் ளிழுத்து வெளியிடுகிறது.

நமது குடலில் சுமார் ஒரு கிலோகிராம் எடை யுள்ள பாக்டீரியாக்கள் உள்ளன.

- அவினாஷ் ஜெயந்த் பாலாஜி,
ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீசக்தி மெட்ரிக் பள்ளி,
செட்டிபாளையம்

கரடிகள் மலைகளிலும் காடுகளிலும் வாழ்கின்றன. இவை இரவில் மட்டுமே நடமாடும். கரடிகள் சுமார் ஆறு அடி உயரம் வரை வளர்கின்றன. பெரும்பாலும் தாவரங்களையும் காய்களையும் சாப்பிடுகின்றன. கரடிக்குப் பார்வை சற்றுக் குறைவு. இவற்றிற்குக் கேட்கும் திறன் அதிகமாக இருக்கும்.



கரடி மணிக்கு ஐம்பது கிலோ மீட்டர் வேகத்தில் ஓடும். தற் போது உலகம் முழுக்க சுமார் 5 லட்சம் கரடிகளே உள்ளன.

குதிரைவாலி



கரடிகள் தேனையும் தேனீக்களையும் விரும்பிச் சாப்பிடுகின்றன.

- ஆ. கீதா, அகரம்


கட்ச் பகுதியில் உள்ள ரான் பாலைவனத்தில் 'குர்' என்ற கழுதை குதிரையைவிட வேகமாக ஓடும்!

-ஆர்.ஆர்.பூபதி, கன்னிவாடி

ஒரிசா போலீஸ் இலாகா



செய்திகளை அனுப்புவதற்கு புறாக்களைப் பயன்படுத்துகிறது. ஒரிசா போலீஸ் தலைமையிடமான கட்டாக்கில் 940 திறமையான புறாக்கள் தகவல் தொடர்பு துண்டிக்கப்படும்போது பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் புறா படையில் ஒரு இன்ஸ்




பெக்டர் ஜெனரல் மற்றும் 68 போலீஸ்காரர்கள் பணி புரிகின்றனர்.

- ஆறுபாதி புகழேந்தி

பெர்லின் நகரத்தில் ஒரு பெண் 2 கைகளில் 2 பென்சில்களையும், வாயில் ஒரு பென்சிலையும், 2 கால்களில் 2 பென்சில்களையும் பிடித்துக்கொண்டு ஒரே நேரத்தில் 5 மொழிகளில் 5 சொற்களை எழுதிக் காட்டுகிறார்.

- ஏ.எல்.பாத்திமா, காரைக்கால்



வேகமாக ஓடும் கழுதை!



ஒவ்வொருவரும்

கிருஷ்ண தேவராயர் தினமும் திறமையுள்ளவர்களைச் சோதித்துப் பரிசளித்து வந்தார். ஒருநாள் ஐந்து நிபுணர்கள் வந்தனர். முதலில் வந்தவர் தர்க்க சாஸ்திரம் கற்றவர். அரண்மனைத் தர்க்கவாதியுடன் தர்க்கம் செய்து வென்றார்.

அடுத்தவர் வியாகரணம் கற்ற பண்டிதர். மூன்றாமவர் சங்கீத நடன விற்பன்னர். நான்காமவர் ஜோதிடப்புலி. ஐந்தாவது நபர் வைத்திய மேதை. ஐவருக்கும் ஏராளமாக பரிசளித்தார் வேந்தர்.

''அப்பாஜி! எப்படி?'' என்று தனது மந்திரியின் அபிப்ராயத்தைக் கேட்டார் அரசர்.

''மன்னா! ஒருவன் சாதம், அடுத்தவன் பொரியல்; மூன்றாமவன் ரசம்; நான்காமவன் கூட்டு; ஐந்தாமவன் ஊறுகாய். இந்த ஐந்தும் தனித்தனியே இருந்தால் சாப்பாடு ருசிக்காது'' என்றார் அமைச்சர்.



''உனக்கு எப்போதும் சாப்பாட்டு நினைப்புதானா? உணவு மட்டுமே வாழ்க்கையாகாது. உனக்குக் கலாரசனையே இல்லை! வைத்தியக் கலை இல்லாவிட்டால் மனிதர்கள் நோயால் நலிந்து கிடப்பார்கள். இசை கவலையை மறக்கடிக்கும்'' என்று மன்னர் கோபிக்க,

''அரசே! பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பது மூத்தோர் மொழி. பசிக்காவிட்டாலோ, பசி நேரத்தில் உணவு கிடைக்காவிட்டாலோ அதுவே நோய்தான்! சாப்பாட்டை இவ்வளவு மலிவாகச் சொல்லி விட்டீர்களே!

ஒவ்வொரு விதம்!

மாலதி

ஒன்று செய்வோம். பணத்தைக் கொடுத்து இந்த ஐவரையும் கூட்டாக ஒருவேளை சமைத் துச் சாப்பிடச் சொல்வோம். அப்புறம் பாருங்கள், இவர்களின் நடைமுறை வாழ்க்கையில் உள்ள திறமையை!'' என்றார் அப்பாஜி.

மன்னர் ஒப்புக் கொண்டார். காவலர்கள் மூலம் ஐவரையும் அரண்மனைக்கு அழைத்த வேந்தர், ஐவரிடமும் சமமாகப் பணம் கொடுத்து ''நீங்கள் ஐவரும் சேர்ந்து ஒரு வேளை சமைத்துச் சாப்பிட்டு வர



வேண்டும். அப்போதுதான் பரிசுப் பொருள் உங்களுக்குச் சொந்தமாகும்'' என அறிவித்தார்.

''பூ, இவ்வளவுதானா?'' என நினைத்தனர். போகும் வழியில் இரண்டு பானைகளும் விறகும், அரிசி, புளி, மிளகாய், உப்பு, பருப்பு என்று வாங்கிக் கொண்டனர். ஊருக்கு ஒதுக்குப்புறமான அரச மரத்தடியில் மூன்று கற்களை வைத்து அடுப்பு பற்ற வைத்தனர். அருகிலுள்ள குளத்திலிருந்து நீர் பிடித்து வந்து பானையில் அரிசியைக் களைந்து போட்டனர்.

''அடாடா! நெய், தயிர் எதுவுமே வாங்கவில்லையே! 'நாம் அரைகுறையாகச் சமைத்து சாப்பிட்டோம்' என்று இதோ காவலுக்கு நிற்கும் ஒற்றன் சொல்லிவிட்டால் பிரச்னையாகி விடும். சமையலை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் போய் நெய் வாங்கிக் கொண்டு வாருங்கள்'' என்று சங்கீத நடன மேதை, தர்க்க சாஸ்திரியை அனுப்பினார்.

''அடுத்த தெருவில் தயிர்க்காரி குரல் கேட்கிறது. நான் போய் தயிர் வாங்கி வந்து விடுகிறேன்'' என்று புறப்பட்டார் வியாகரண பண்டிதர்.

''நான் வாழை இலை வாங்கி வருகிறேன்'' என்று விரைந்தார் ஜோதிடப்புலி.

''நான் காய்கறி வாங்கி வருகிறேன்'' என்று போனார் வைத்திய நிபுணர்.

அடுப்பில் 'தளபுள' என்று சாதம் கொதிக்க அதற்கு ஏற்றபடி தாளம் போட்டார் நடன, சங்கீத சாஸ்திரி. அப்புறம் மகிழ்ச்சி அதிகமாகி, 'தா, தை' என்று நாட்டியமாட ஆரம்பித்தார். சாதம் பக்குவமாகி விட்டதால் கொதிப்பு அடங்கியது.

சாஸ்திரிக்கு வந்ததே கோபம்!

''என்ன நீ ஒத்தாப் போல தாளம் போடாம சோம்பேறியாயிட்டே? இப்படி இருந்தா எப்படி உருப்படுவே?'' என்று ஆத்திரத்துடன் காலால் உதைக்க பானை சரிந்து சோறெல்லாம் மண்ணில் கொட்டிவிட்டது.

''ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பது சரியாயிற்றே'' என்று நொந்து கொண்டு தலையில் கை வைத்தபடி அவர் அமர்ந்தார்.

தர்க்க சாஸ்திரி தொன்னையில் நெய் வாங்கி வரும்போது ''தொன்னைக்கு நெய் ஆதாரமா? நெய்க்கு தொன்னை

யார் இந்தப் பிரபலம்?



அமெரிக்காவிலும் ஃபிரான்ஸிலும்கூட இவரது படங்கள் பிரபலமடைந்தன.

ஆதாரமா?'' என்ற ஆராய்ச்சியில் இறங்கியதால் பாதையிலுள்ள பள்ளத்தைக் கவனிக்காமல் குப்புற விழுந்து நெய் எகிறிவிட்டது! அவரும் சோர்வோடு திரும்பினார்.

இலக்கண, இலக்கிய, வியாகரண பண்டிதரோ தயிர்க்காரி, ''தயிரோ, தயிரு, தயிருவாங்கலையோ, தயிரு'' என்று வித விதமாய் கூவ, ''என்ன நீ? இரண்டு மாத்திரை கொடுக்க வேண்டிய கடைசி ஓகாரத்திற்குப் பத்து மாத்திரை கொடுக்கிறாய்?'' என்று சண்டையிட்டார்.

அவள் கோபத்துடன் ''இதோ, பாரு! இதுக்கெல்லாம் வாத்தியார் வைச்சா சொல்லித் தருவாங்க? எனக்குத் தயிரு விக்கணும். எப்படி கூவினா என்ன? வலுச் சண்டைக்கு வர்றீயா? உனக்குத் தயிர் விக்கறதா இல்லே'' என்றபடி கோபமாகப் போக, எங்கும் தயிர் அகப்படாமல் அலைந்து விட்டுத் திரும்பினார் அவர்.

ஜோதிட சாஸ்திரி ஒரு வாழை தோட்டத்துக்குப் போய் இலை கேட்க அவன் அவரையே இலை பறித்துக் கொள்ளச் சொன்னான்.

''ஐயோ! தெற்கே குலை தள்ளியிருக்கிறதே! உன் குடும்பத்துக்காகாதே'' என்று அவர் கூற, தோட்டக்காரன் எரிச்சலுடன், ''நாலா பக்கமும் வாழை வைச்சா நாலு திசையிலும்தான் குலை தள்ளும். சும்மா துக்கிரித்தனமாப் பேசாதீங்க. வந்த வேலையைப்பாருங்க'' என்றான்.



ஆசிரியை : *கடுகு சிறுத்தாலும் என்ன குறையாது? சொல்லு பார்க்கலாம்!''*

மாணவன் : *விலை குறையாது டீச்சர்!*

– பி. கந்தசாமி

''இப்போ ராகு காலம்; இப்போ ஓரை நல்லாயில்லே'' என்று நேரத்தைக் கடத்தியவர் ஒருவழியாய் மரத்தில் ஏறவும் பல்லி சத்தமிட்டது.

''பலன் நல்லாவே இல்லியே'' என்றபடி கீழிறங்கினார். தோட்டக்காரன் ''தோட்டக் கதவைப் பூட்டணும். வெளியே போங்க'' என்று விரட்டி விட்டான்.

காய்கறி வாங்கச் சென்ற வைத்தியர் ''வாழைக்காய் வாய்வு; கத்திரிக்காய் சொறி வரும். உருளைக் கிழங்கு மப்பு. பூசணிக்காய் நீர் வைக்கும்'' என்று ஒவ்வொன்றாய் தள்ள, கடைக்காரன், ''வியாபாரத்தைக் கெடுக்கறீயேப்பா! நீ போ, அந்தப் பக்கம்'' என்று கூப்பாடு போட அவரும் வெறுங்கையோடு வந்தார்.

ராயரும் அப்பாஜியும் ஒற்றர்கள் மூலம் எல்லாவற்றையும் அறிந்தனர். 'ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு ஆகாது' என்பதை ஒப்புக் கொண்டார் அரசர். ●



கார் ரேஸ்

கார் ரேஸில் யாரும் ஓடுவதில்லை. கார்கள்தான் ஓடும். ஆனால் இந்தப் பந்தயத்தில் கார்களும் ஓடாது. நம்முடைய அணியின் திறமைக்கேற்ப படிப்படியாக நகரும்.

ஆட்டத்துக்கான முன் தயாரிப்புகளைச் செய்து கொள்ளலாம்.

வழக்கம்போல, விளையாட வந்திருக்கும் எல்லோரும் இரண்டு அணிகளாகப் பிரிந்து கொள்ள வேண்டியது. அதன் பிறகு ஆட்ட மைதானம் வரைய வேண்டும்.

இந்த விளையாட்டுக்கான மைதானம் கொஞ்சம் புதுமையான அமைப்புடையது.

அதாவது ஒரு நீண்ட செவ்வகம் வரைந்து கொள்ள வேண்டும். அதே போல் ஒரு வட்டமும் வரைந்து கொள்ள வேண்டும். இப்போது, அந்த வட்டத்தை நடுபாதியில் வெட்டி, இரண்டு துண்டுகளாக்க வேண்டும். பின்னர், இந்தத்



விளையாட்டு



என்.சொக்கன்

துண்டுகளை, நீள் செவ்வகத்தின் இருபுறமும் திசைக்கு ஒன்றாக வைத்துவிட வேண்டும். இந்த வடிவம்தான் நமது மைதானம்.



இப்போது, மைதானத்திற்கு வெளியே ஒரு கார். உள்ளே ஒரு கார் என்று வைத்துக் கொள்ளலாம். உங்களிடம் இரண்டு கார் பொம்மைகள் இருந்தால் அதைப் பயன்படுத்தலாம். இல்லாவிட்டால், ஏதேனும் ஒரு பத்திரிகையில் வந்த கார் படத்தை வெட்டி வைத்துக் கொள்ளலாம். அதுவும் முடியாவிட்டால், சும்மா பாவனைக்கு ஒரு பாட்டில் மூடியோ, அல்லது சிறிய புளியங்கொட்டையோகூட போதும்.

அடுத்து, மைதானத்தை இருபது அல்லது முப்பது சம பிரிவுகளாகப் பிரிக்கவும். இதில் இரண்டு கார்களும் ஒரே இடத்திலிருந்து



புறப்படும்படி நிறுத்தி வைக்க வேண்டும். அந்தப் படத்தில் இரண்டு பெருக்கல் குறிகளையும் போட்டுக் கொள்ளுங்கள்.




எப்போதும்போல், இரு அணிகளின் தலைவர்கள் பூவா, தலையா போட்டு யார் முதலில் விளையாடுவது என்று தீர்மானிக்க வேண்டும். இந்தக் காசுச் சுண்டு தலில் வெற்றியடைந்த அணிக்கு, இன்னொரு அணி கேள்விகளை வீச வேண்டும் வழக்கம்போல. எளிய கேள்விகள், பளிச்சென்ற ஒற்றை வார்த்தை பதில்கள்! (சில சமயங்களில் வேதியியல் ஃபார்முலாக்களைக்கூட கேள்வியாகக் கேட்கலாம். அப்போது அந்த ரேஸுக்கு சவுகர்யமாக 'ஃபார்முலா (ஒன்) ரேஸ்' என்று பெயர் சூட்டிவிடலாம்.)

ஓவியப் போட்டி

'தீபாவளி' என்றால் எல்லோருக்கும் கொண்டாட்டம்தான்! இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு : **வண்ணமிகு பட்டாசுகள்.** உங்கள் கற்பனைக்கு ஏற்றவாறு வண்ணத்தில் படங்களை வரைந்து அனுப்புங்கள். முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி : 8.10.2005

முதல் அணி ஒரு கேள்விக்குச் சரியான பதில் சொல்லிவிட்டால் அவர்களுடைய கார் ஒரு நிலை முன்னோக்கி நகரும். தவறாக பதில் சொல்லிவிட்டால், கார் நகராது.



இந்த முதல் அணி ஏதேனும் ஒரு கேள்விக்குத் தவறாக பதில் சொன்னாலோ, அல்லது பதில் தெரியவில்லை என்று சொன்னாலோ, எதிர் அணிக்கு வாய்ப்பு சென்றுவிடும்.

இப்போது முதல் அணி அவர்களிடம் கேள்வி கேட்க வேண்டியது. அவர்கள் சரியாக பதில் சொல்லி, வட்டத்தினுள் இருக்கும் தங்களின் காரைப் படிப்

படியாக முன்னோக்கி நகர்த்த வேண்டும்.



இப்படி இரண்டு கார்களும் கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து முன்னேற, சுற்றியுள்ளவர்கள் அவர்களைக் கை தட்டி உற்சாகப்படுத்தலாம். ஒரு கார் முழுசாக ஒரு சுற்று வந்துவிட்டால், அவர்கள் வெற்றியடைந்துவிட்டதாக அர்த்தம். ஒரு பெரிய கொடியை ஆட்டி, அவர்களுக்கு வெற்றி மாலை சூட்டிவிடலாம்!

ஒருவேளை, இப்படி சீக்கிரத்தில் விளையாட்டு முடிந்துவிடுவது உங்களுக்குப் பிடிக்காவிட்டால், 'ஐந்து சுற்று ஆட்டம்', 'ஏழு சுற்று ஆட்டம்' என்று விளையாடலாம். அதாவது இரு அணிகளில் ஏதேனும் ஓர் அணியின் கார் ஐந்து அல்லது ஏழு சுற்றுகள் முழுசாகச் சுற்றி முடியும்வரை இந்த ஆட்டம் தொடரும்.

இப்படி நீளும் பந்தயங்களின்போது, அவ்வப்போது இரு அணிகளும் ஆட்டத்தை நிறுத்தி, போதுமான ஓய்வு எடுத்துக் கொள்வது அவசியம்.

இந்தப் பந்தய ஆட்டத்தில் மேலும் சுவாரஸ்யம் சேர்ப்பதற்கு இரண்டுக்கு மேற்பட்ட அணிகளைக்கூட சேர்த்துக் கொள்ளலாம். கார்கள் ஒன்றோடொன்று மோதி விபத்தாகிவிடாமல் பார்த்துக் கொண்டால் போதும்.

என்ன, காதுக்குள் எஞ்சின்களின் கரகரவென்று சத்தம் கேட்க ஆரம்பித்துவிட்டதா? வாருங்கள். ஓட்டாமல் ரேஸ் விளையாடலாம்! ●



''எந்த ரோவில வேணுமானாலும் டிக்கெட் கொடுங்க. 'சி ரோ' மட்டும் வேண்டாம்!''

''ஏன் சார்?''

''முன்னால 'பீரோ' இருக்குமே. மறைக்கும்!''

– டி.அருண்குமார்,
பத்தாம் வகுப்பு, அழகிரி
சுரேஷ் அரசு உயர்நிலைப்
பள்ளி, ஆலாங்கொம்பு.


துப்பறியும் துஷ்யந்த்!
3
கதை : மாயூரன்
படம் : ராம்கி
துஷ்யந்த் கதவைத் திறக்க தொழிலதிபரின் டிரைவர் நின்றார்.
யார் வேணும்?
எங்க முதலாளி இந்த போட்டோவை ஐயாவிடம் கொடுக்கச் சொன்னாங்க.
உங்க முதலாளியா, பேரு?
சந்திர சேகரன்னு சொன்னால் ஐயாவுக்குத் தெரியும்.
புகைப்படத்தை வாங்கிப் பார்த்த துஷ்யந்த் திடுக்கிட்டான்.
யார் துஷ்யந்த் வாசலில்?
சந்திரசேகர் ஏதோ புகைப்படம் அனுப்பியிருக்கார்.


யார் அது? என்ன போட்டோ?
இதெல்லாம் ஆபீஸ் விவகாரம். அந்த போட்டோவைக் கொண்டு வா.
சொல்ல மறந்து போச்சே. கல்யாண ஜவுளி, நகை வாங்கணும், துணைக்கு யாரையாவது அனுப்ப முடியுமான்னு கோமதி கேட்டாங்க.
திடீர்னு கேட்டால் எப்படி? துஷ்யந்துக்கு லீவாச்சே. அவனை அனுப்பி வை.


கோமதி, பரமசிவத்தோடு துஷ்யந்தும் ஆட்டோவில் புறப்பட்டான்.
எந்தக் கடைக்குப் போகணும் மாமா?
முதலில் ஏ.டி.எம்.மில் பணம் எடுத்துக் கணும்.
நகைக் கடையில்...
அந்த லாங் செயினை எடுங்க.
போதும். கிளம் பலாம்.
ஜவுளிக் கடையில்...
பட்டுப் புடவைகள் மட்டும் இப்போ எடு.
நேரமாகும். ஆட்டோவை அனுப்பிடுங்க.
புடவை எடுத்து முடித்த பிறகு...
களைப்பா இருக்கு. ஹோட்டலில் சாப்பிட லாம்!
துஷ்யந்த் உனக்கு என்ன வேணும்?


வீட்டுக்குத் திரும்பினார்.
நீங்க ஒரு கைப்பெட்டி வெச் சிருந்தீங்களே... அது எங்கே?
சரியாப் பாரு.
புடவையும் என் பையும்தானே இருக்கு. உங்க பெட்டி எங்கே?
ஐயோ, அதிலேதானே நகை, பணம் எல்லாம் இருக்கு!
எங்கே விட்டோம்னு தெரியலையே! தலை சுத்துதே!
என்னங்க சொல்றீங்க? நாற்பது பவுன் நகையும் அந்தப் பெட்டியில் இருக்குதே! எங்கே விட்டீங்க?
கடைகளில் விடவில்லை. நாம் வீடு திரும்பும்போது ஆட்டோவில அந்தப் பெட்டி இருந்தது. நான் பார்த்தேன்!
ஆட்டோவில் விட்டுட்டோமா? எந்த ஆட்டோ என்று எப்படி கண்டுபிடிப்பது?
சரி, ஆனால் கிடைக்குமா?
போலீஸ் ஸ்டேஷன் போகலாம் மாமா.
(தொடரும்)

விடுகதைப் பக்கம்



III. 1. கணுக்கால் நீரில் கரடி நீச்சல் போடுது - அது என்ன?

2. குட்டையான அழகிக்கு நெட்டையான சடை - அது என்ன?

3. உயிரில்லாத பறவை ஊர் ஊராய்ப் பறக்குது - அது என்ன?

- வே. ஐஸ்வர்யா, நான்காம் வகுப்பு, பாரதி ஆங்கிலப் பள்ளி, நல்லூர்

மண்ணிலே பிறந்தவன்; மங்கையரைக் கவர்ந்தவன்!

I. 1. வைரத்தோடுகள் வயலில் கிடக்குது; சந்திரன் வந்தான், எப்போதும் போல எடுக்காமல் போய்விட்டான்; தூங்காது சூரியன் வந்தான்; தூக்கிச் சென்றான் - அவன் யார்?

-அரி.விக்னேஷ்வர், செஞ்சி

II. 1. மண்ணிலே பிறந்தவன், மங்கையரைக் கவர்ந்தவன் - அவன் யார்?

2. ஒரே நிமிடத்தில் உறைந்து போவோம், உறைந்ததைக் கண்டு வியந்து போவோம் - அது என்ன?

3. ஒரே கூட்டில் ஆயிரம் முட்டைகள் - அது என்ன?

- என். ஆனந்தி, ஐந்தாம் வகுப்பு, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி

IV. 1. சொம்பு நிறையக் கம்பு; தொட்டுப்புட்டா வம்பு - அது என்ன?

2. அகோரத் தாய்க்கு ஐம்பது குஞ்சுகள்; பிஞ்சுகள் வாயெல்லாம் நஞ்சு - அது என்ன?

3. ஆளில்லா வீட்டு வாசலில் அவன் மட்டும் அமர்ந்திருப்பான் - அவன் யார்?

- ஜி. விஷ்ணுகிரி, எட்டாம் வகுப்பு, அழகிரி சுரேஷ் அ.உ.பள்ளி, ஆலாங்கொம்பு.

விடைகள் :

I. 1. பனித்துளி, **II.** 1. தங்கம், 2. புகைப்படம், 3. சோளக்கதிர் **III.** 1.தவளை, 2. கத்தரிக்காய், 3. விமானம் **IV.** 1. தேன் - தேன்கூடு, 2. தீக்குச்சிகள், 3. பூட்டு

சாதனை

ஜூனியர் ஆனந்த்!



மைலாப்பூரில் வசித்து வரும் ஸ்ரீநாத்துக்கு இன்னமும் தம் அருமை புரியவில்லை. தினம் தினம் தன்னைத் தேடி வரும் பத்திரிகையாளர்கள், டீ.வி. கேமிராக்களுக்கு கேஷுவலாக பதிலளித்து விட்டு வழக்கம்போல் செஸ்ஸில் மூழ்கி விடுகிறார்.

சமீபத்தில் ஃப்ரான்ஸில் நடந்த உலக செஸ் போட்டியில் 12 வயதிற்கு உட்பட்ட பிரிவில் வெற்றிவாகை சூடியது நம் ஸ்ரீநாத்தான். சிறு வயதிலேயே உலக சாம்பியன் ஆகிவிட்டாலும் அதன் பின்னால் கடின உழைப்பு, அர்ப்பணிப்பு எல்லாம் இருந்திருக்கிறது. அது பற்றியெல்லாம் ஸ்ரீநாத் நம்மிடம் கூறியபோது,

''நான் தினமும் ஸ்கூல் முடிச்சு வரும்போது என் ஃப்ரண்ட்ஸெல்லாம் ஜாலியா விளையாடிட்டு இருப்பாங்க. ஆனா நான் வந்தவுடனே கம்ப்யூட்டர்ல செஸ் விளையாட ஆரம்பிச்சிருவேன். அப்புறம் கோச்சிங். 'செஸ்'தான் என்



* உலக சாம்பியன்ஷிப் போட்டியில்...

வாழ்க்கைன்னு ஆயிருச்சு. இதுல எனக்கு ரொம்ப ஆர்வம்ங்கிறதால வேறெந்த பொழுதுபோக்கிலும் கவனம் செலுத்துறதில்லை'' என்கிறார்.



சரி, எப்படி செஸ் ஸ்ரீநாத்துக்கு அறிமுகமானது?

ஜாலியாக பேச ஆரம்பித்தார் ஸ்ரீநாத் : ''அப்போ எனக்கு அஞ்சு வயசிருக்கும். ஃபேமிலி டூர் போயிருந்தோம். அண்ணா கஸினோடு செஸ் விளையாடிட்டு இருந்ததைப் பார்த்து எனக்கும் ஆடணும்னு தோணுச்சு. ஆனா நான் சின்னப் பையன்னு யாரும் விளையாட சேர்த்துக்கலை. டூரிலிருந்து வந்தபிறகு அப்பாகிட்ட அடம்பிடிச்சு செஸ் போர்டு வாங்கினேன். தினமும் ப்ராக்டிஸ் பண்ணி பண்ணி ஒரே வருஷத்துல ஸ்டேட் லெவல் போட்டியில் முதல் பரிசு வாங்கினேன். வீட்ல எல்லோருக்கும் சந்தோஷம். இதுக்கப்புறம் ரொம்ப ஊக்கப்படுத்த ஆரம்பிச்சாங்க.''

அதன்பின்பு, ஸ்ரீநாத்தின் வேகத்தை யாராலும் தடுக்க முடியவில்லை. மளமளவென கலந்து கொண்ட அனைத்துப் போட்டிகளிலும் ஜெயிக்க ஆரம்பித்தார். செஸ் உலகின் பார்வை இந்தச் சின்னஞ்சிறுவன் மீது விழ ஆரம்பித்தது.

''மாநில அளவுல 8 வயதுக்கு உட்பட்ட போட்டியில் மட்டும் 8 தடவை டைட்டில் வாங்கியிருக்கேன். 2002ம் வருடம், 8 வயதின்போது, இந்தியாவிலேயே குறைந்த வயதில் FIDE ரேட்டட் ப்ளேயரா வந்தேன்'' என்று குதூகலிக்கிற ஸ்ரீநாத் இதுவரை தேசிய அளவிலான போட்டியில் மட்டும் தங்கம் வென்றதில்லை. அதற்குள் உலக சாம்பியன் போன்ற பல சர்வதேச போட்டிகளில் வென்றுவிட்டார்.

விஸ்வநாதன் ஆனந்துக்கு ஸ்ரீநாத் என்றால் கொள்ளைப் பிரியம்!

''ஆனந்த் சார்தான் எனக்குப் பெரிய இன்ஸ்பிரேஷன். அவ்வளவு பெரிய ப்ளேயர் பந்தா இல்லாம என்னை ரொம்பவும் ஊக்கப்படுத்துவார். அடிக்கடி போன்ல பேசி டிப்ஸ் எல்லாம் கொடுப்பார். ஸ்ரீநாத்தோட வெற்றிகளை ரொம்ப எதிர்பார்க்கிறேன்னு பல பேட்டிகள்ல என்னைப் பத்தி பெருமையா பேசியிருக்கார்'' எனும்போது பெருமை தாங்கவில்லை ஸ்ரீநாத்துக்கு.

உலக சாம்பியன் ஆவதற்கு முன்பே காமன்வெல்த் கேம்ஸ், ஏஷியன் சாம்பியன்ஷிப் போட்டிகளில் தங்கம் வென்றிருக்கிறார். ''இந்தியாவிலேயே செஸ் விளையாட்டுல இன்னைக்கு தமிழ்நாடுதான் பெஸ்ட். எங்க அசோஷியேஷன் நிறைய போட்டிகள்

நடத்தி எங்க திறமைகளை யெல்லாம் வெளியில கொண்டு வர்றாங்க. இப்போ எனக்கு மாரி அருள் சார் கோச்சிங் கொடுத்திட்டு இருக்கார்'' என்ற ஸ்ரீநாத்திடம் ஃப்ரான்ஸ் அனுபவம் பற்றிக் கேட்டோம்.


''நான் போனமுறையே க்ரீஸ்ல நடந்த போட்டியில உலக சாம்பியன் ஆயிருக்கணும். அப்போ உடம்பு சரியில்லாததால மூணாவது இடம்தான் கிடைச்சது. இந்த முறை விடக்கூடாதுன்னு உறுதியா போராடினேன். நான் எப்பவும் அட்டாக்கிங் கேம் தான் ஆடுவேன். தைரியமா ஒருசில காயின்களை இழந்தாலும் கடைசியில நான்தான் ஜெயிப்பேன். இந்த அணுகுமுறை ஃப்ரான்ஸில் ரொம்ப உதவியா இருந்துச்சு'' என்கிறார் சிரித்துக் கொண்டே.

பெருமைக்குரிய ஸ்ரீநாத்தின் தந்தை நாராயணன் நம்மிடம் பேசினார்.

''ஏதோ விளையாட்டா கேட்கறானேன்னுதான் செஸ்போர்டு வாங்கிக் கொடுத்தேன். இன்னிக்கு உலக சாம்பியனாகி எங்களைச் சந்தோஷத்துல மூழ்கடிச்சிருக்கான். இவனை வெளிநாட்டு போட்டிகள்ல ஆட வைக்கிற அளவுக்கு நிதி வசதி இல்லாட்டியும் ஸ்ரீநாத்தோட திறமை, உழைப்பை வீணாக்க வேண்டாம்னு எங்க சக்திக்கு மீறி செலவழிக்கறோம். அடுத்ததாக இவன் கிராண்ட் மாஸ்டர் ஆகணும்னா அதுக்கேத்த பயிற்சியாளரை நியமிக்கணும். இதுக்கெல்லாம் கூடுதல் செலவாகும். நல்ல ஸ்பான்ஸர் கிடைச்சா இவனோட வளர்ச்சி இன்னும் பிரமாதமா இருக்கும்'' என்றார்.

- ச.ந. கண்ணன்


• **ஸ்ரீநாத் பெற்றோருடன்...**



“ரங்கநாதா! அர்த்த ஜாம பூஜை முடிவதற்குள் உன்னைத் தரிசித்து விட வேண்டும் என்று ஓடி வந்தது பயனில்லாமல் போயிற்றே! என்னைப் பார்க்க உனக்குப் பிடிக்க வில்லையா?” எனப் பலவாறு புலம்பி அழுதார் சட்டை முனி.

'டங், டங்' என்று மணிகள் ஒலிக்க கோயில் கதவுகள் திறந்துகொண்டன. மேள தாளங்கள் ஒலித்தன. முரசுகள் முழங்கின.

சட்டை முனி பரவசத்தோடு



தானாகத் திறந்த கதவுகள்!

ஆர்.பொன்னம்மாள்

உள்ளே நுழைந்தார். ரங்கநாதரைக் கண் குளிர தரிசித்தவர் மெய் மறந்து அருகிலேயே உட்கார்ந்து விட்டார்.

வாத்திய ஓசை கேட்ட தர்மகர்த்தா, அர்ச்சகர்கள், ஊர் மக்கள் அனைவரும் திடுக்கிட்டனர். பரபரப்புடன், கையில் ஆயுதங்களோடு ஆலயத்தை நோக்கி விரைந்து வந்தனர்.

திறந்த கதவு அவர்களைப் பயமுறுத்தியது. எச்சரிக்கையாக அடிமேல் அடி வைத்து உள்ளே சென்றனர்.

கம்பளிச் சட்டை அணிந்த ஒரு சித்தர். அவர் மேல் ரங்கநாதனின் ஆபரணங்கள்!



கொஞ்சமாவது யோசிக்க வேண்டாமா? 'திருடன் பதுங் காமல் பிடித்துக் கொள்' என்று உட்கார்ந்திருப்பானா?

ஆத்திரம் அறிவை மறைத் தது. ஆபரணங்களைப் பறித்து சுத்தம் செய்து பகவானுக்கு அணிவித்தனர்.

சட்டை முனியைத் தரதர வென்று இழுத்துச் சென்று அரசன் முன் நிறுத்தி நடந்த தைக் கூறினர்.

''உனது பெயரென்ன? எந்த ஊர்?'' என்று விசாரித்தான் அரசன்.

''இறைவன் குடியிருக்கும் இடமெல்லாம் எனது ஊரே! எனது குருநாதர் போக முனிவர். திருமூலரும் கொங்கணவரும் உரோமரிஷியும் என் தோழர்கள். சிவபெருமானைச் சந்திக்க அடிக்கடி கைலை செல்வேன். அங்கே கடும் பனியல்லவா? அதனால் சதா கம்பளிச் சட்டை அணிந்திருப்பேன். சீர்காழியில் சிவனது பெயர் சட்டைநாதன். என்னையும் அவன் பெயரை முன்னே வைத்து சட்டைமுனி என்பர்'' என்று நீண்ட விளக்க மளித்தார் சட்டைமுனி.

''முனிவன் என்று சொல்லிக் கொள்கிறாய்! பகவான் நகை யைக் களவாடலாமா?'' என்று கேட்டான் வேந்தன்.

''அபசாரம், அபசாரம்! எனக் கெதற்கு நகை? செம்பைத் தங்க மாக்கும் வித்தையை எனக்குக் கற்றுக் கொடுத்தவன் அவன். அவன் எனக்கு நகையணிந்து அழகு பார்த்திருக்கிறான்!'' என்றார் சித்தர்.

''சரி! உலோக தாமிரத்தைக் கொண்டு வரச் சொல்கிறேன். தங்கமாக்கிக் காட்டு'' என்றான் கொற்றவன்.

''அது வேண்டாத வேலை! மூடியிருந்த கோயில்முன் நிறுத் துங்கள். மறுபடி பரந்தாமன் கதவுகளைத் திறந்து நான் குற்றமற்றவன் என்பதைப் புரிய வைப்பான்'' என்றார் முனிவர்.

அப்படியே செய்யப்பட்டது.

''அரங்கா!'' என மூன்று முறை கூவினார் சித்தர். உடனே ஆலயக் கதவுகள் விரியத் திறந் தன. முரசுகள் ஒலித்தன. எல் லோரும் ஆச்சரியத்துடன் சன் னதிக்குள் நுழைய ரங்கனின் ஆபரணங்கள் ஒவ்வொன்றாகக் கழன்று சட்டை முனியை அலங் கரித்தன. அப்போதே சட்டை முனி ஆண்டாளைப் போல், இறைவனோடு ஒன்றாகக் கலந்து விட்டார்.

அரசனும் ஊர் மக்களும் பிரமித்திருந்தனர்.

யார் இந்தப் பிரபலம்?



பிரபல திரைப்பட இயக்குனர். மொத்தம் 28 திரைப் படங்களை இயக்கி யிருக்கிறார்.

நீங்கள் மிகவும் விரும்பும் கோகுலம் உங்கள் வீடு தேடி வர கோகுலம் சந்தா செலுத்துங்கள்.



பெயர்: ....

முகவரி: ....

....

....


....

ஒரு வருட சந்தா ரூ. 72/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக சேர்த்து அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032





* டெக்னாலஜி ரொம்பத்தான் முன்னேறிவிட்டது!

உங்கள் பெற்றோர்கள் உங்களுடைய சின்னச் சின்ன செலவுகளுக்கு பாக்கெட் மணி என்று கொஞ்சம் பணம் தருவார்கள் இல்லையா? நீங்கள் அந்தப் பணத்தை எப்படி செலவு பண்ணுவீர்கள்? இதோ பணத்தைப் பற்றி ஒரு கதையைப் பார்க்கலாமா!

ஒரு வயதான மனிதர் வசித்து வந்தார். அவருக்குப் பிச்சை எடுப்பதுதான் தொழில். தினமும் பகல் வேளையில் தெருக்களில் பிச்சை எடுப்பார். பசி எடுக்கிறபோது சாப்பிடுவார். இரவில் தன்னுடைய குடிசையில் படுத்து தூங்குவார். இப்படியே அவரது வாழ்க்கைச் சக்கரம் ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் அவர் திடீரென்று செத்துப் போனார். அக்கம் பக்கத்தார் விஷயம் அறிந்து அவரை முறைப்படி அடக்கம் செய்வதற்கு ஏற்பாடு செய்தனர். அவர் இறந்த

* கார் ரெடி! பயணம் செய்ய நீங்கள் ரெடியா?



நெட் பிட்ஸ்

பணம் வெறும் காகிதமா?



* 'உயிரோடு ஒரு கைப்பை' வைத்துக் கொண்டிருக்கிறாரே. உள்ளே எதை வைத்தாலும் பத்திரமாய் இருக்குமா?

சில நாட்கள் கழித்து பக்கத்து வீட்டுக்காரர் அந்த வீட்டுக்குள் சென்று அந்தப் பெரியவர் ஏதாவது விட்டுவிட்டுப் போயிருக்கிறாரா என தேடிப் பார்த்தார். ஒரு பழைய பானைக்குள் கொஞ்சம் துணிகள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றை எடுத்து வெளியே போட்டார். பானையின் அடியில் ஒரு சுருக்குப் பை இருந்தது. அதனைத் திறந்து பார்த்தார். உள்ளே ஐயாயிரம் ரூபாய் இருந்தது. பக்கத்து வீட்டுக்காரருக்கு ஒரே ஆச்சரியம்! 'பிச்சை எடுத்து பிழைத்துக் கொண்டிருந்த கிழவருக்கு




* சைக்கிள்காரர் பலே ஆசாமிதான். எத்தனை பூட்டு போட்டு வைத்திருக்கிறார்!

எப்படி ஐயாயிரம் ரூபாய் கிடைத்தது? யாரிடமிருந்தாவது திருடி இருப்பாரா?' என்று ஊரார் பேசிக் கொண்டார்கள்.

பாவம்! இறந்து போன பிச்சைக்காரர் தினமும் தான் பிச்சை எடுத்ததில் ஒரு பகுதியைச் சேமித்து வைத்திருந்தார். பின்னால் தனக்கு ஒரு தேவை என்றால் உபயோகமாக இருக்கும் என்பதே அவரது எண்ணம். ஆனால் பரிதாபம்! அவர் தன்னுடைய சேமிப்பை தனக்காகப் பயன்படுத்திக் கொள்ளவே அவருக்கு வாய்ப்பு கிடைக்காமல் போய்விட்டது.

பணம் சேமிக்கவே கூடாது என்பது இல்லை. பணம் என்பது வெறும் காகிதம்தான். அதைப் பயன்படுத்தினால்தான் அதற்கு மதிப்பு. பணத்தை நல்லபடியாகவும் பயன்படுத்தலாம்; விரயமும் செய்யலாம். அதை எப்படி பயன்படுத்துகிறோம் என்பது நம் புத்தி சாலித் தனத்தைப் பொறுத்தது.

யார் இந்தப் பிரபலம்?



1921ல் பிறந்து 1992ல் இறந்தவர்.

அடுத்ததாக சில ஜோக்ஸ்

மோகன் : மருந்தைக் குடித்துவிட்டு ஏன் மேலும் கீழுமாய் குதிக்கிறாய்?

ராஜு : மருந்து குடிப்பதற்கு முன்னால் பாட்டிலை குலுக்க மறந்துட்டேன். அதனால இப்போ குதிக்கிறேன்!''

ஓர் ஆசாமி லாட்டரி டிக்கட் வாங்கினான். அவனுக்கு ஒரு கோடி ரூபாய் பரிசு விழுந்தது. டிக்கட்டை எடுத்துக் கொண்டு போய் விற்பனையாளரிடம் கொடுத்து பரிசுப் பணத்தைத் தரும்படிக் கேட்டான். விற்பனையாளர் டிக்கட்டை வாங்கி நம்பரைச் சரி பார்த்துவிட்டு பரிசுப் பணத்தைத் தர சம்மதித்தார். பரிசுத் தொகையான ஒரு கோடி ரூபாயில் வரியாக இருபது லட்சத்தை பிடித்தம் செய்து கொண்டு மீதியைக் கொடுத்தார். நமது ஆசாமிக்குக் கோபம் வந்துவிட்டது. ''பரிசுத் தொகையை முழுமையாகக் கொடு'' என்றார்.

விற்பனையாளரோ ''வரியைப் பிடிக்காமல் பரிசுப் பணத்தைத் தர முடியாது'' என்றார்.

உடனே நமது ஆசாமி ''அப்படியென்றால் இந்தா உன் பரிசு சீட்டு. நான் டிக்கட் வாங்கக் கொடுத்த பத்து ரூபாயைத் திருப்பிக் கொடு'' என்றாரே பார்க்கலாம்!


தொகுப்பு :

எஸ்.சந்திரமௌலி



டாமிக்கு வழிகாட்டுங்கள்!

படத்திலிருக்கும் தவறுகள் என்னென்ன?



வாழைப்பழம், புத்தகம், பூனையின் வால்

1000/- ரூபாய் பரிசுப் போட்டி

இங்கு 5 கேள்விகளும் 6 படங்கள் மற்றும் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான விடைகளைத் தேடிக் கண்டுபிடித்து எழுதுங்கள். பெற்றோர் கையொப்பம் அவசியம். முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள். மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி : 20.10.2005

I. பதில் என்ன?

1. சச்சினின் சொந்த மாநிலம் எது?
2. டெஸ்ட் போட்டிகளில் அடித்த சதங்கள் எத்தனை?
3. சச்சின் கேப்டனாக இருந்திருக்கிறாரா?
4. இவரது பட்டப் பெயர்?
5. இவர் வலது கை ஆட்டக்காரரா?




II. பூச்சிகளின் பெயர்களைச் சரியாக எழுதுங்கள்.













வண்ணத்துப் பூச்சி,
கரப்பான் பூச்சி, வெட்டுக்கிளி,
அந்துப் பூச்சி,
கோலியாத் வண்டு, தும்பி

ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032



வேலைகளை ஒத்திப் போடலாமா?

டாக்டர் கு.கணேசன்

அன்புள்ள டாக்டருக்கு,
வீட்டுப் பாடத்திலிருந்து எந்த வேலையையும் நாளைக்குச் செய்து கொள்ளலாம் என்று ஒத்திப் போடும் மனதை எப்படி சரி செய்வது டாக்டர்?

- ஜோதி, ஸ்ரீபெரும்புதூர்

எந்த ஒரு செயலிலும் ஒருவர் வெற்றி பெற வேண்டுமென்றால் அச்செயலில் அவருக்கு உண்மையான ஆர்வமும் முழுமையான ஈடுபாடும் இருக்க வேண்டியது அவசியம். கல்வி கற்றல் என்பதும் அப்படித்தான். கற்பதை கசப்பு மருந்தாக கருதாமல் விரும்பி உண்ணும் விருந்தாக எண்ணினால் கற்பதில் ஓர் உற்சாகம் உண்டாகிவிடும். வீட்டுப்பாடம் செய்வது என்பது கற்பதில் ஒரு பிரிவு. உன்னைப் போன்ற குழந்தைகள் வீட்டுப் பாடம் செய்வதற்கு உற்சாகமின்றி இருப்பதற்கு முக்கிய காரணங்கள் மூன்று. பாடத்தில் ஆர்வமின்மை, கவனமின்மை, சோம்பேறித்தனம்.

வீட்டுப்பாடம் செய்வதை ஒத்திப்போடுதல் என்பது ஒரு நோய் மாதிரி. இந்த நோய் குழந்தைக்கு வந்துவிட்டால் அதன் படிப்பை நிச்சயம் பாதிக்கும்.

குழந்தைகள் சிறு வயதிலிருந்தே தங்கள் கடமைகளை முறைப்படி சரியாக, நேரத்தோடு செய்யப் பழகிக் கொள்ள வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் ஏற்படுத்தப்பட்டதுதான் வீட்டுப் பாடம். இதைக் குழந்தைகள் புரிந்து கொள்ள வேண்டும். முக்கியமாக, வீட்டுப்பாடத்தை ஒழுங்காகச் செய்யும் ஒரு குழந்தை தன் பணிகளில் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயல்படுகிறது. வீட்டுப்பாடத்தைச் செய்யும்போது குழந்தை சுயமாகவும் சுதந்திரமாகவும் சிந்தித்துச் செயல்பட வாய்ப்புக் கிடைப்பதால் அதன் சுயமுயற்சி வளர்கிறது. ஒரு செயலைக் காரண காரியத்துடன் முறைப்படி செய்து முடிக்கும் பண்பு உருவாகிறது. தனக்குத் தேவையான பொருள்களைத் தானே தேடிக் கொள்ளும் ஆற்றல் உண்டாகிறது. தனக்குத் தரப்பட்ட பணியைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் செய்து முடிக்கும் நேர நிர்வாகத்

மனமே நலமா?

தைத் தெரிந்து கொள்கிறது.

ஜோதி! இத்தனை நன்மைகள் தருகின்ற வீட்டுப்பாடத்தை ஒத்திப்போடுவது தவறல்லவா? இன்றிலிருந்து வீட்டுப்பாடத்தை அன்றன்றைக்கே செய்து விட வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொள். வகுப்பில் ஆசிரியர் பாடங்களை நடத்தும்போது ஆர்வமுடன் கவனி. உன் சந்தேகங்களை வகுப்பிலேயே கேட்டுத் தெரிந்து கொள். உனக்குப் பாடங்கள் புரிந்து விட்டால் போதும், வீட்டுப்பாடம் செய்வதற்கு உற்சாகம் கிடைத்துவிடும்.

மாலை ஆறு மணியிலிருந்து ஒன்பது மணி வரையுள்ள மூன்று மணி நேரத்தை வீட்டுப்பாடம் செய்வதற்கு, புதிய பாடங்களைப் படிப்பதற்கு, படித்ததை எழுதிப் பார்ப்பதற்கு அல்லது ஒப்பிப்பதற்கு, இடையில் இரவுச் சிற்றுண்டி உண்பதற்கு என்று நான்கு பிரிவுகளாகப் பிரித்துக் கொள். கடினமாகக் கருதும் வீட்டுப்பாடத்தை முதலில் செய். எளிதாக உள்ளதை இறுதியில் வைத்துக் கொள்.

பெற்றோருக்கு :

பெரும்பாலான குழந்தைகள் உடல் களைப்பினாலும் சோம்பேறித்தனத்தினாலும் தான் வீட்டுப்பாடம் செய்ய அடம்பிடிப்பர். அப்போது அவர்களை மிரட்டி, அடித்து உங்கள் வழிக்குக் கொண்டு வர முயற்சிக்காதீர்கள். படிக்க வேண்டிய நேரத்தில் படித்தால்தான் பலன் கிட்டும் என்பதை உங்கள் வாழ்க்கை அனுபவங்கள் மூலம் பக்குவமாகக் கூறிப் புரிய வையுங்கள். வீட்டுப்பாடத்தைச் சரியான நேரத்தில் செய்து முடித்தால் தட்டிக் கொடுத்துப் பாராட்டுங்கள்.

ஒரு குழந்தை தொடர்ந்து வீட்டுப்பாடம் செய்யச் சிரமப்பட்டால் பெற்றோர் அதை வகுப்பாசிரியரின் கவனத்துக்குக் கொண்டு சென்று காரணம் அறிய வேண்டும்.

குழந்தையின் உடல், மனநல பாதிப்புகளுக்கு மருத்துவரின் ஆலோசனைகளைப் பெற்றுச் சரி செய்து விடலாம். ●





விரைந்து அனுப்புங்கள்!

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!

கருத்துப் படிவம்

ஹாய் ஃபிரெண்ட்ஸ்!

23 ஆண்டுகளாக கோகுலம் உங்கள் மத்தியில் வெற்றி நடை போட்டு வருகிறது. கோகுலத்தின் மதிப்பு மிக்க வாசகர்கள் நீங்கள். கோகுலம் பற்றிய உங்களின் கருத்துகள் கோகுலத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும்.

உங்களுடைய நேரத்தில் 10 நிமிடம் ஒதுக்கி இந்தப் படிவத்தை நிரப்பி அனுப்பும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

இந்தப் படிவம் 15.10.2005க்குள் வந்து சேர வேண்டும்.

முதலில் அனுப்பும் 25 வாசகர்களுக்கு ரூ.50/- பரிசாக வழங்கப்படும்.

உங்களுடைய கருத்துகளை அறிய ஆவலோடு காத்திருக்கிறோம்.

அன்புடன்
கோகூ

பெயர் : ____________ வகுப்பு : ____________

வயது : ____________ பள்ளி : ____________

வீட்டு முகவரி : ____________ பள்ளி முகவரி : ____________

____________ ____________

____________ ____________

____________ ____________

பின் கோடு : ____________ பின் கோடு : ____________

அப்பா பெயர் : ____________ அம்மா பெயர் : ____________

உத்யோகம் : ____________ உத்யோகம் : ____________

பரிசுகளை வெல்லுங்கள்!



1. பொதுவாக நீங்கள் படிக்கும் ஆர்வம் உள்ளவரா?

☐ ஆமாம் ☐ இல்லை

2. எவ்வளவு காலமாக கோகுலம் படிக்கிறீர்கள்? ☐ ஆண்டுகள்

3. கோகுலம் உங்களுக்கு எப்படி கிடைக்கிறது?

☐ சந்தா ☐ கடைகள் ☐ பேப்பர் ஏஜெண்ட்

☐ பள்ளி நூலகம் ☐ பொது நூலகம் ☐ நண்பர்கள் மூலம்

4. கோகுலம் சரியான நேரத்தில் கிடைக்கிறதா?

☐ ஆமாம் ☐ இல்லை ☐ காலதாமதமாக கிடைக்கிறது

5. கோகுலம் வாங்குவதில் சிரமம் இருக்கிறதா?

☐ ஆமாம் ☐ இல்லை

என்ன சிரமம்? ______________________

6. உங்கள் பள்ளி நூலகத்தில் கோகுலம் இருக்கிறதா?

☐ ஆமாம் ☐ இல்லை ☐ தெரியாது

7. வீட்டில் வேறு யாரெல்லாம் கோகுலம் படிப்பார்கள்?

☐ அப்பா ☐ அம்மா ☐ சகோதரன்/சகோதரி ☐ மற்றவர்கள்

8. கோகுலத்தைப் பற்றி நண்பர்களிடம் பேசுவீர்களா?

☐ ஆமாம் ☐ இல்லை



9. உங்கள் நண்பர்களுக்கு கோகுலத்தை சிபாரிசு செய்வீர்களா?

☐ ஆமாம் ☐ இல்லை

10. நீங்கள் படிக்கும் மற்ற பத்திரிகைகள்?

அ. ______________ ஆ. ______________

இ. ______________________

11. கோகுலத்தில் நிறையப் பகுதிகள் வெளிவருகின்றன. நீங்கள் எதை அதிகம் விரும்புகிறீர்கள்? வரிசைப்படி எழுதுங்கள்.

1. ______________ 2. ______________ 3. ______________

4. ______________ 5. ______________ 6. ______________

7. ______________ 8. ______________ 9. ______________

* கதைகள், படக்கதைகள், கட்டுரைகள், புதிர்கள், அன்புள்ள ஜக்கு, ஜோக்ஸ், பிரபலங்களின் வாழ்வில், நினைவில் நின்றவை, ஓவியப் போட்டி, 1000/- ரூபாய் பரிசுப் போட்டி, மனமே நலமா?, துணுக்குகள், நடுபக்க போஸ்டர், அறிவியல், கவர் ஸ்டோரி, சாதனை.

12. வேறு எந்தப் பகுதிகளை கோகுலத்தில் ஆரம்பிக்கலாம்?

1. ____________ 2. ____________ 3. ____________

13. கோகுலத்தில் எந்தப் பகுதியில் இன்னும் முன்னேற்றம் தேவை?

பகுதி	இன்னும் சிறப்பாகச் செய்யலாம்	நன்று	சூப்பர்
அட்டைப் படம்			
படங்கள்			
வண்ணம்			
நடை			

14. வேறு ஏதாவது ஆலோசனைகள்

____

____

இவ்வளவு நேரம் படிவத்தைப் பூர்த்தி செய்ததற்கு நன்றி. உங்கள் கருத்துகள் கோகுலத்தைச் செழுமையாக்க நிச்சயம் உதவும்.



அனுப்ப வேண்டிய முகவரி :
ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032



அன்புடன் ...

கடலை ஆழப்படுத்துவது எப்படி என்ற கட்டுரை படித்தேன். அனைத்து துறைமுகங்களிலும் டிரெட்ஜர் கப்பல் நிரந்தரமாக நிறுத்திவைக்கப்படும் என்பது இப்போதுதான் தெரிகிறது. பாரதியார் பாட்டில் 'சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்' என்று தானே பாடி இருக்கார். ஆனால் இப்போ சேதுவை கால்வாய் வெட்டி கடலை ஆழப்படுத்துகிறோமே!

- க.க.விக்ரம், சென்னை

செப்டெம்பர் 9 உலக எழுத்தறிவு நாளை நினைவு படுத்தி எல்லோரும் படிக்க வேண்டும் என்று ஆசிரியர் கூறிய அறிவுரை நெஞ்சத்தை நெகிழ வைத்தது. படிக்கத் தெரிந்தவர்கள் படிக்காதவர்களுக்குப் படிப்பைச் சொல்லித் தர வேண்டியது கடமை என்ற தலையங்க வரிகள் கோகுலத்தின் வைரவரிகள்.

-எஸ்.கண்ணன், நெய்வேலி

மனமே நலமா? பகுதியில் தயக்கத்திற்குத் தடைபோட்ட டாக்டரின் பதில் வாழ்க்கை முன்னேற்றத்திற்குத் துணை நிற்கும். காசோவரி பறவைகளைப் பற்றிய செய்திகளை இப்போது தான் படிக்கின்றோம். அரக்கனையும் அருமையான குணங்கள் நிறைந்தவனாக மாற்றிய மாதங்கியின் சிறுகதை நன்று. ஓடாமல் கால்பந்து விளையாட்டுப் பகுதி பொது அறிவினை வளர்த்துக் கொள்ள துணை புரியும்.



தயக்கத்திலிருந்து விடுதலை!


எழில் கொஞ்சும் இலங்கையின் வளங்களும் கலாசாரங்களும் பிரமிக்க வைத்தன.

-சு.இந்துமதி

பார்த்திபன் போல் பல பேர் தங்களுக்குப் பலவித திறமைகள் இருந்தும் தயக்கம் காரணமாக அதை வெளிப்படுத்த முடியாமல் ஒருவித தாழ்வு மனப்பான்மையுடன் முடங்கிக் கிடக்கிறார்கள். தயக்கத்தைப் போக்க டாக்டர் கூறும் பக்குவமான அறிவுரை நிச்சயம் பல பேரை தயக்கம் எனும் சிறையிலிருந்து விடுதலை செய்து புது மனிதர்களாக்கும்.

-கார்த்திக் முத்துக்கிருஷ்ணன், ஜவஹர் பள்ளி, நெய்வேலி





அப்துல்லா அரேபிய மொழியில் அவர்களிடம் பேசினான். ராஜுவைப் பிடித்திருந்த அரபு நாட்டவன் ஆங்கிலத்தில் "நாங்கள் உங்களுக்கு நல்லது செய்யவே வந்திருக்கிறோம். எங்கள் மீது நம்பிக்கை வைத்து எங்களுடன் வாருங்கள்" என்றான். "இவர்கள் அந்த அக்பரின்

மர்மப் புத்தகம்!

6

ஆட்கள். பொய் பேசுகிறார்கள்" என்றான் ராஜு.

அப்துல்லாவைப் பிடித்திருந்த மற்றொருவன் "இதோ பார், அந்தப் புத்தகத்தைக் கொடுத்துவிடு, உடனே உங்களைவிட்டு விடுகிறேன்" என்றான். "அந்தப் புத்தகம் எங்கள் அப்பாவிடம் உள்ளது. வாருங்கள், என் அப்பாவிடம் பேசி உங்களுக்கு வாங்கித் தருகிறேன்" என்றான் ராஜு.

குண்டர்கள் இருவரும் பேசிக் கொண்டனர். அந்த நேரத்தில் ராஜுவும் அப்துல்லாவும் ஒரே நேரத்தில் அவர்களின் கைகளைப் பல்லால் கடித்தனர். "ஆ..." என்று அலறியபடி குண்டர்கள் கையை உதற, எடுத்தார்கள் ஓட்டம் ராஜுவும் அப்துல்லாவும். எத்தனை வேகமாக ஓடியும் அவர்களைப் பிடிக்க முடியாமல் தடுமாறினர் அரபு நாட்டவர்.

வீட்டை அடையுமுன்னர் ராஜு "நல்ல வேளை ராதிகா நம்மோடு வரவில்லை. இந்த ஆபத்



தைக் குறித்து நம் பெற்றோரிடம் எதுவும் கூற வேண்டாம். வீணாக அவர்கள் கவலைப்படுவார்கள்'' என்றான்.

''ஏன் இப்படி ஓடி வருகிறீர்கள்?'' என்று சங்கரன் கேட்டார். பதிலளிக்குமுன் விமலா ''நாளை நம் குடும்பமும் அப்துல்லாவின் குடும்பமும் சேர்ந்து எகிப்து நாட்டின் மற்ற நகரங்களான அபுசிம்பல், அஸ்வான், அப்பர்வால்டா, லக்ஸர், டூத்தன்காமூனின் கல்லறை எல்லாம் பார்க்கச் செல்கிறோம். பேசாமல் தூங்குங்கள். நாளை அதிகாலையில் கிளம்ப வேண்டும்'' என்றார்.

''அப்பா, நாம் இன்னும் அலெக்ஸாந்திரியாவை முழுமையாகச் சுற்றிப் பார்க்கவில்லையே'' என்றாள் ராதிகா.

''வந்தபிறகு பார்க்கலாம். ஒரு முறை பாலைவனத்தையும் பார்க்கலாம்'' என்றார் சங்கரன்.

''ராதிகா, நீ போயிருந்த எகிப்து நாட்டுத் திருமணம் எப்படியிருந்தது?'' ராஜு கேட்டான்.

''அவர்கள் திருமணத்தைக் கோலாகலமாகக் கொண்டாடுகிறார்கள். பாட்டும் நடனமும் அவர்களின் சாப்பாடும் உடைகளும் மிகப் பிரமாதம். இத்தனை ஆரவாரமாக நடக்கும் திருமணத்தை நான் பார்த்ததேயில்லை'' என்றாள் ராதிகா. ''ம்... சீக்கிரம் தூங்கச் செல்லுங்கள்'' என்றார் விமலா.


மறுநாள் அதிகாலையில் அப்துல்லா, ரஹீம், அப்துல்லாவின் அம்மா மற்றும் ராஜுவின் குடும்பத்தினரும் சேர்ந்து கெய்ரோ நகரத்திற்கு கிளம்பினர். ரயிலில் மூன்று மணி நேரப் பயணத்திற்குப் பிறகு கெய்ரோ அடைந்தனர். அங்கிருந்து 'லுக்ஸர்' நகரத்துக்குச் சென்றனர்.

''லுக்ஸர் நகரம் ஓர் அரண்மனை நகரம். இங்கு 64 பாரோ மன்னர்கள் அரண்மனைகளைக் கட்டியுள்ளனர். ராஜாக்களின் பள்ளதாக்கு, ராணிகளின் பள்ளதாக்கு இங்கு மிகவும் பிரசித்தி பெற்ற இடங்கள். எகிப்து பேரரசர்கள் இங்கு மலைகளின் நடுவே பெரிய அரண்மனைகளைக் கட்டி வாழ்ந்துள்ளனர்'' என்று ரஹீம் எல்லோருக்கும் புரியும்படி எடுத்துக் கூறினான்.

அங்கிருந்து 'அபுசிம்பல்' சென்றடைந்தனர். ''இங்குதான் நைல் நதி வெள்ளத்தில் மூழ்கியிருந்த இரண்டு கோயில்களை மீட்டனர். அதற்கு 'யுனெஸ்கோ. உலக நிறுவனத்தின் பணி உலகப் பிரசித்திப் பெற்றது'' என்ற அக்பரின் குரல் கேட்டு அதிர்ச்சியடைந்தனர்.

''ஹலோ மிஸ்டர் அக்பர், இங்கு சுற்றிப் பார்க்க வந்தீர்களா?'' என்று சங்கரன் கை குலுக்கினார். ''இது என் நாடு. இங்கு நான் பார்க்காத இடமே யில்லை. என் நண்பன் ரஹீ

கோகுலம் சுழல் கோப்பை



செஞ்சி, மாதேசம் பாளையம், சிறுமுகை, மதுரை, நல்லூர்... இந்த ஊர்களில் உள்ள எந்தப் பள்ளி இந்த ஆண்டு சுழல் கோப்பையை வெல்லப் போகிறது என்று இன்னும் இரண்டே மாதங்களில் தெரிந்து விடும். கோப்பையை வெல்ல படைப்புகளை உடனே அனுப்பி வையுங்கள்.

மைப் பார்க்க வந்தேன்'' என்றார் அக்பர்.

பிறகு ரஹீமுடன் அரேபிய மொழியில் பேசத்துவங்கினார். அக்பர் பேசுவதைக் கேட்ட அப்துல்லாவின் முகத்தில் அதிர்ச்சி. ரஹீம் உடனே அப்துல்லாவைப் பார்த்து ''இவர்களையெல்லாம் ஹோட்டலுக்கு அழைத்துச் செல். நான் பிறகு வருகிறேன்'' என்றார்.

''என்ன ரஹீம், நாம் பேசுவதை அவர்களும் கேட்கட்டுமே? நாம் எத்தனை நல்ல நண்பர்கள் என்று அவர்களும் அறிவார்கள்'' என்று அக்பர் சிரித்தார்.

ரஹீம் அரேபிய மொழியில் அப்துல்லாவிடம் ஏதோ கூறினார். அப்துல்லா அவசரமாக ''வாருங்கள். நாம் போகலாம்'' என்று எல்லோரையும் அழைத்துச் சென்றான்.

''என்னப்பா இது? திடீரென்று ரஹீமைவிட்டு நாம் போவது சரியா?'' என்று சங்கரன் கேட்டார். ''இல்லை அங்கிள், மாமா ஏதோ முக்கியமாக பேச வேண்டும் என்றார். நாம் வெய்யிலில் நிற்க வேண்டாம் என்று எண்ணினேன்'' என்று பணிவாக அப்துல்லா கூறினான்.

''என்ன இது, ஏதோ மர்மப் படம் போல உள்ளதே. ஜேம்ஸ் பாண்ட் போல அந்தப் பெரியவர் எங்கும் வருகிறார். அடிக்கடி புத்தகத்தைக் கேட்டு தொந்தரவு செய்கிறார். என்ன அப்துல்லா நீயாவது விவரம் கூறக் கூடாதா?'' என்று ராஜு கேட்டான்.



''தலைவருக்கு இருந்தாலும் ரொம்பவும் தன்னம்பிக்கை.''
''ஏன்?''
''கட்சி உடைஞ்சிடுச்சேன்னு கேட்டதற்கு 'பரவாயில்லை 'ஃபெவிக்கால்' போட்டு ஒட்டிடுவோம்'கிறாரு!''

– டி.அருண்குமார், பத்தாம் வகுப்பு, அழகிரி சுரேஷ் அரசு உயர்நிலைப் பள்ளி, ஆலாங்கொம்பு

அப்துல்லா ரகசியக் குரலில் ''ராஜு, பெரியவர்கள் தூங்கிய பிறகு நீயும் ராதிகாவும் ஹோட்டலின் தோட்டத்திற்கு வாருங்கள். நான் எல்லா விவரங்களையும் கூறுகிறேன். அதுவரை ஜாக்கிரதை'' என்றான்.

''ராஜு, எனக்குப் பயமாக உள்ளது. அப்துல்லாவின் பேச்சில் ஏதோ மர்மம் உள்ளது. நாம் அப்பாவிடம் கூறிவிடலாம் வா'' என்றாள் ராதிகா.

''என்னை நம்பு ராதிகா. இன்னும் ஒரு மணி நேரத்தில் உங்களிடம் பேசுகிறேன்'' - அப்துல்லா.


சங்கரனும் விமலாவும் தூங்கிய பின் ராஜுவும் ராதிகாவும் தோட்டத்திற்கு வந்தனர். அங்கு அப்துல்லா அவர்களிடம் பேசத் துவங்கினான்.

அவன் பேச்சைக் கேட்டு ராதிகாவும் ராஜுவும் அதிர்ச்சியில் உறைந்து நின்றனர்.

(தொடரும்)







மிகப் பெரிய நாடு!



உலகில் மிகப் பெரிய நிலப் பரப்புள்ள நாடு ரஷ்யாதான்! 1991க்கு முன் இதனை சோவியத் யூனியன் என்று அழைத்தனர். இப்போது ரஷ்யா என்ற தனி நாடாகிவிட்டது. ரஷ்யாவின் நிலப்பகுதி ஆசியா, ஐரோப்பா இரு கண்டங்களிலும் பரவிக் கிடக்கிறது என்றால், அது எவ்வளவு பெரிய நாடு என்று கற்பனை செய்து பாருங்கள். உலக உருண்டையைக் கையிலெடுத்து, ரஷ்யாவைப் பார்த்தால், உருண்டையை ஒரு சுற்று சுற்றாமல், ரஷ்யாவைக் காண முடியாது. அவ்வளவு பெரியது! உலகின் ஒட்டுமொத்த நிலப் பரப்பில் 1/6 பகுதியை ரஷ்யா பெற்றிருக்கிறது. இது வடக்கே ஆர்ட்டிக் பெருங்கடலிலிருந்து, தெற்கே காகேசியன் மலை வரை, கிட்டத்தட்ட 4,000 கி.மீ. நீளத்திற்கு பரவியுள்ளது. ரஷ்யாவின் பரப்பில் 11 நேரமண்டலங்கள் அமைந்துள்ளன. நம் இந்தியா போல, ரஷ்யா முழுமைக்கும் ஒரே நேரம் கிடையாது. 11 இடங்களில் நேரம் மாறுபடும்.



போவோமா புது உலகம்!




ரஷ்யாவின் நிலப்பரப்பு பல விதமான அமைப்புகளை உடைய, தட்டையான நிலப் பகுதியுள்ள பரந்துபட்ட சம வெளி மேற்கிலும் வடக்கிலும் உள்ளது. பீடபூமியை ஒட்டி மலைத் தொடர்கள் விட்டு,



விட்டு தெற்கிலும் கிழக்கிலும் காணப்படுகின்றன. கிழக்கிலிருந்து மேற்காக பெரிய ஐரோப்பிய சம வெளி உள்ளது. யூரல் மலைதான் ரஷ்யாவின் தெற்குப் பகுதியாகும். மேற்கு சைபீரியா சமவெளியாகவும், மத்திய சைபீரியா பீடபூமியாகவும், தென் கிழக்கு சைபீரியா மலைத் தொடர்களாலும் அமைந்து, ரஷ்யாவை பல அமைப்புகளில் அலங்கரிக்கின்றன. பெரும்பகுதியிலான ரஷ்யப் பகுதிகள் படிவப் பாறைகளால் ஆனவை. இங்கே முன்பு பனிக்காலம் இருந்ததற்கான தடயங்கள் காணப்படுகின்றன. மாஸ்கோவிற்கும் செயிண்ட்ஸ் பீட்டர்ஸ்பர்கிற்கும் இடையில் பழைய



மோகனா



பனிக்காலம் சுமார் 10,000 - 12,000 ஆண்டுகளுக்கு முன் இருந்தது தெரியவந்துள்ளது.

காகேசஸ் மலைகள், காஸ்பியன் கடல், கருங்கடலுக்கு இடையில் தாழ்நிலங்கள் உள்ளன. பெரிய காகேசஸ் மலையிலுள்ள, 'எல்ப்ரஸ்' சிகரம் தான் உயரமான சிகரமாகும். தெற்கு மலைத் தொடர்களில் மதிப்புமிக்க தாது வளங்கள் ஏராளமாக உள்ளன. ஊரல், எனிசே ஆற்றுக்கு இடையிலான, மேற்கு சைபீரியல் சமவெளி, உலகின் மிகப் பெரிய நிலப் பரப்பாகும். துருவக் கடலிலிருந்து, தெற்கில் மத்திய ஆசியா வரை நீண்டுள்ளது. வடக்கு மத்தியப் பகுதிகளில் உலகில் அதிகமான இயற்கை எரிவாயு தளங்கள் உள்ளன. ரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் தொங்கிக் கொண்டிருக்கும் 'காம் சட்கா' தீபகற்பத்தில் உள்ள 120 எரிமலைகளில், 23 இன்றும் உயிருடன் கனன்று கொண்டிருக்கின்றன. குரில் தீவுகளில் 100 எரிமலைகள் உள்ளன.

ரஷ்யாவின் நீளமான ஆறுகள் எல்லாம் சைபீரியாவில்தான் உள்ளன. 'ஒப்', 'இர்ட்டிஷ்' ஆசியாவின் நான்காவது பெரிய ஆறுகள். இவை இரண்டும் சேர்ந்து 5410 கி.மீ. நிலங்களை நனைத்து மேற்கு சீனாவிலிருந்து, மேற்கு சைபீரியா வழியாக ஆர்ட்டிக் கடலில் சங்கமிக்கின்றன. 'அமூக்' ரஷ்யாவின் இரண்டாவது பெரிய ஆறு. தனியாக ஓடும் ஆறுகளில் 'லீனா' தான் நீளமானது. பைகல் ஏரிக்கு அருகில் உள்ள 'வால்கா' நதி ரஷ்யாவின் நான்காவது பெரிய நதி.

சோசலிச சோவியத் யூனியனாக இருந்தபோதுதான் பெரிய அணைகள், மின்சக்தி நிலையங்கள், நீர்ப்பாசன அமைப்பு, வெள்ளத் தடுப்பு, விண்வெளிப்பயணம் என மக்களுக்கு நன்மை பயக்கும் செயல்கள் செய்யப்பட்டன. ரஷ்யாவில் நிறைய இயற்கை ஏரிகள் இருந்தாலும், அவை வடமேற்கில் உறைப் பனிப் பகுதியில் உள்ளன. தெற்கிலுள்ள 'காஸ்பியன் கடல்' கடல் என்று கூறப்பட்டாலும், இது ஏரிதான். உலகின் பெரிய 'உப்பு நீர் ஏரி' இதுவே. இதன் அருகே உள்ள 'பைகல் ஏரி', உலகிலுள்ள நல்ல தண்ணீர் ஏரிகளுள் மிகப் பெரியது. உலகிலேயே நீளமான தொடர் கடற்கரை உள்ள நாடும் ரஷ்யா தான்.

ரஷ்யாவின் காடுகள் பெரும்பாலும் சைபீரியாவில்தான் உள்ளன. இது ரஷ்யாவின் 2/5

யார் இந்தப் பிரபலம்?



இவர் இயக்கிய முதல் திரைப்படத் தலைப்பின் பொருள் 'சாலையின் பாடல்'.

பகுதியை உள்ளடக்கியது. உலகின் 1/4 பகுதி காடுகள் இங்கேதான் உள்ளன. காடுகளிலும் தரையின் கீழ் உறை பனிதான். ஊசியிலை மரங்கள் பிர்ச், பாப்ளர், ஆஸ்பென், வில்லோ போன்றவை இங்கு காணப்படுகின்றன. இங்குள்ள 'டாய்கா' காடுகள்தான் உலகின் மிகப் பெரிய ஊசியிலைக் காடுகளாகும். மீன் பிடிக்கும் தொழிலும் பதப்படுத்துதலிலும் சிறந்து விளங்குகிறது. உலகின் மிகப் பெரிய மீன் தொழிற்சாலை இங்கு உள்ளது.

ரஷ்யா முழுமைக்கும் வேறு வேறு விதமான விலங்கினங்கள் வாழ்கின்றன. 'சைபீரிய புலி'தான் உலகின் பெரிய பூனை இனங்களில் மிகப்பெரியது. துந்திர பிரதேசத்தில் பனிக்கரடி, சீல் வால்ரஸ், பனி நரி, ஆர்ட்டிக் நரி, லெம்மிங், ரெயின்டீர், ஆர்ட்டிக் முயல் போன்ற பாலூட்டிகள் உள்ளன. வெள்ளை கவுதாரி, பனி ஆந்தை, நாரை, பூன்ஸ், வாத்து, அன்னம் போன்ற வெண்மை நிறம் கலந்த பறவைகள் சைபீரியாவின் குளிரிலிருந்து தப்பிக்கத்தான் வேடந்தாங்களுக்குப் பறந்து வந்து, இனப் பெருக்கம் செய்துவிட்டு, குடும்பத்துடன் சொந்த ஊர் திரும்புகின்றன.

உலகில் அதிகமான இயற்கை வளம் கொண்ட பூமியில் ரஷ்யா முக்கியமானது. எரிபொருள் அதிகம் கிடைக்கிறது. உலகில் கிடைக்கும் நிலக்கரியில் 50% இங்குதான் கிடைக்கிறது. பெட்ரோலிய வயல்கள் நிறைய உள்ளன.


பனிமூடிய நகரமான 'டாம் போஸ்' மாஸ்கோவின் தென் கிழக்கே உள்ளது. மாஸ்கோதான் ரஷ்யாவின் தலைநகர். முக்கால் வாசி ரஷ்யா மோசமான சீதோஷ்ன நிலையில்தான் இருக்கிறது. இங்கு நீண்ட அடர் குளிர்நாட்களே அதிகம். கோடை நாட்கள் மிகக் குறைவான நாட்களையும், குளிரையுமே கொண்டது. காரணம் ரஷ்யா மிக உயரமான அட்சரேகைப் பகுதியில் அமைந்துள்ளதுதான். ஆர்ட்டிக் உறைபனியின் ஆதிக்கம் ரஷ்யா முழுவதும் ஊடுருவியுள்ளது.

உலக மக்கள் தொகையில் ஆறாவது இடம் வகிக்கிறது ரஷ்யா. மக்கள் பரவலாக அங்கும் இங்கும் வளமான இடங்களில் மட்டுமே வாழ்கின்றனர்.

மாஸ்கோவின் மையத்திலுள்ள செஞ்சதுக்கத்தில்தான், மனதைக் கவரும் பல்வேறு ரஷ்ய நினைவகங்கள் உள்ளன. இவை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. ரஷ்யாவின் அரசு மையமான 'கிரெம்ளின்'



''காபியில் சர்க்கரை போட்டு எந்தக் கையால் கலக்குவே?''
''ஏன் கேட்கற? வலது கையாலதான்.''
''அப்படியா, நான் கையை விட்டு காபியைக் கலக்க மாட்டேன். ஸ்பூனாலதான் கலக்குவேன்!''
- ஜி.செல்லம்மாள்,
இராஜபாளையம்





மாளிகையும் இங்குதான் உள்ளது. மாஸ்கோவுக்கு அடுத்த பெரிய நகரம் செயிண்ட்ஸ் பீட்டர்ஸ்பர்க். இது துறைமுகமும் பெரிய தொழில் மையமாகவும் உள்ளது.

ரஷ்யாவின் அலுவலக மொழி ரஷியன். நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. இவர்களின் வாழ்க்கை மேற்கத்திய மயமாக மாறிக் கொண்டிருக்கிறது. பாரம்பரிய விளையாட்டுகள் என செஸ், சாகர் மிகவும் பிரபலம்!

ரஷ்யர்கள் உடல் வலு உள்ளவர்கள். ஒலிம்பிக்ஸில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக தங்கம் வாங்குவது ரஷ்யர்கள்தான். ஜிம்னாஸ் டிக்கில் சீனாவுக்கு அடுத்த இடம் ரஷ்யர்களுக்குத்தான்.

ரஷ்யர்களின் 'பாலே' நடனம் உலகப் புகழ்பெற்றது.

ரஷ்யர்களின் அருங்காட்சியகம், நூலகம், திரையங்குகள், கலைப் பொருட்கள் எல்லாம் கலை உணர்வு மிக்கவையாகவே உள்ளன. செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் உள்ள 'ஸ்டேட் ஹெர்மிட்டெஜ் அருங்காட்சியகம்' உலகப் புகழ் பெற்றது. மிகப் பெரியதும்கூட. முன்பு உலகின் பெரிய நூலகமான 'லெனின் நூலகம்' எனப்பட்ட 'தேசிய நூலகம்' மாஸ்கோவில் உள்ளது. இங்கே 250 மொழிகளில் சுமார் 3,00,00,000 புத்தகங்கள் உள்ளன!

விண்வெளியில் முதன் முதலில் பறந்தவர்கள் ரஷ்யர்கள்தான். 1957ல் அக்டோபர் 4ம் நாள் 'ஸ்புட்னிக் 1' என்ற விண்வெளி ஓடத்தை பூமியின் ஈர்ப்பு சக்தியைத் தாண்டி முதன் முதலில் விண்ணில் செலுத்தினர். பின் ஸ்புட்னிக் 2, முதன் முதலில் நாயைச் சுமந்து சந்திரன் நோக்கிப் பறந்தது. 1961 ஏப்ரல் 12ம் நாள், ரஷ்யா 'யூரிகாரின்' என்ற மனிதனை முதன் முதலில் விண்கலத்தில் அனுப்பி சாதனை செய்தது. முதன் முதலில் விண்வெளியில் பயணம் செய்த வாலண்டினா தெரஸ்கோவாவும் ரஷ்யப் பெண்தான். அது மட்டுமல்ல 'மிர்' என்ற வானில் இயங்கும் முதல் விண்வெளி நிலையத்தை அமைத்ததும் ரஷ்யாதான்! ●

இரத்தம் குடிக்கும் வௌவால்!


ஆழி




வௌவால், குட்டிப் போட்டுப் பால் ஊட்டி வளர்க்கிற ஒரு 'பாலூட்டி' இனம். அதன் வாயில் பற்கள் உண்டு. வௌவாலுக்கு இறக்கைகள் இருந்தாலும், பறவைகளின் இறக்கைகளுக்கும் இதற்கும் பலவித வேறுபாடுகள் இருக்கின் றன. வௌவால்களைக் 'கைச் சிறகி' என்று இனம் பிரிக்கிறார்கள்.




வௌவால்களில் சுமார் 2000 இனங் கள் இருக்கின்றன. அவற்றைப் பழம் தின்னும் வௌவால்கள், பூச்சி தின்னும் வௌவால்கள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கிறார்கள். பழம் தின்னும் வௌவால்களுக்குக் கண்கள் பெரியவை. பூச்சி தின்னும் வௌவால் களுக்குக் கண்கள் சிறியவை.




வௌவால்களில் மிகவும் பெரியது 'பறக்கும் நரி' என்னும் பழம் தின்னி வௌவால். அதன் இறக்கைகளின் நீளம் சுமார் 1·5 மீட்டர்! எடை சுமார் 1 கிலோ!



வெளவால்களில் மிகவும் சிறியது 'கிட்டி' வெளவால். அது ஒரு நிலக்கடலை அளவே இருக்கும்! எடை சுமார் 1·5 கிராம் தான்!



வெளவால்கள் மஞ்சள், சிவப்பு, பழுப்பு, ஊதா, கறுப்பு என பல நிறங்களிலும் இருக்கின்றன!




பூச்சிகளைத் தின்னும் வெளவால் ஒரு மணி நேரத்தில் நூற்றுக் கணக்கான பூச்சிகளைத் தின்று தீர்த்துவிடுகிறது. அந்துப் பூச்சிகள், கொசுக்கள், வண்டுகள் இவற்றை யெல்லாம் தின்னுகிறது. அதன் நாக்கின் மேல், உள் பக்கமாக வளைந்த முட்கள் இருக்கின்றன. அதன் நாக்கில் பட்ட எந்தப் பூச்சியும் தப்பமுடியாது!



சில வெளவால்கள் கொடூர குணம் கொண்டவை. அவற்றுக்குப் பசி வந்துவிட்டால் தன்னுடன் வாழும் மற்ற வெளவால்களைத் தின்றுவிடும்!



சுமார் 70 சதவீத வெளவால்கள் ஒரு நாளைக்குச் சுமார் 20 கிராம் இரத்தத்தை உணவாகக் குடிக்கின்றன! தென் அமெரிக்காவில் உள்ள 'வம்பயர்' என்னும் வெளவால்கள் பயங்கரமானவை. அவை விலங்குகளின்மேல், அல்லது தூங்கிக் கொண்டிருக்கும் மனிதர்களின் மேல் உட்கார்ந்து, மரத்துப் போகும்படியான திரவத்தைப் பீச்சியடிக்கின்றன. பிறகு பற்களால் கடிக்கின்றன. அத்துடன் இரத்தம் உறையாமல் இருக்கவும் ஒரு திரவத்தைப் பயன்படுத்தி இரத்தத்தைக் குடிக்கின்றன!




வெளவால்களுக்குக் கண்கள் நன்றாகத் தெரியும். தவிர, கண்களைப் பயன்படுத்தாமலும் அவற்றால் பறக்கமுடியும்! அவை 'கேளாத ஒலியை வாயினால் எழுப்பி, அதனால் உண்டாகும் எதிரொலியைக் கொண்டு, தடங்கல் இல்லாமல் பறக்கின்றன!




வெளவால் ஓர் ஆண்டுக்கு ஒரு குட்டிதான் போடும். பிறந்து 5 நாட்கள் வரை குட்டிக்குக் கண் தெரியாது. குட்டி பிறந்து 14 நாட்களுக் குப் பிறகுதான் அதனால் பறக்க முடியும்.
தாய் வெளவால்கள் இருப்பிடத்திற்குத் திரும்பிய தும், தங்கள் குட்டிகளை அவற்றால் கண்டுபிடிக்க முடியாது! ஆனால், எந்தக் குட்டியும் எந்தத் தாயிடம் வேண்டுமானாலும் பால் குடித்துக் கொள்ளும்!

வட அமெரிக்காவில் வாழும் வெளவால்களில் சில இனங்கள் குளிர் காலத்தில், சுமார் 2500 கி.மீ. தூரம் பறந்து சென்று, மெக்ஸிகோ நாட்டில் சில மாதங்களைக் கழித்துவிட்டு, மறுபடியும் தங்களுடைய அதே இருப்பிடங்களுக்கு மிகச் சரியாகத் திரும்பி வந்து விடுகின்றன! அதுதான் ஆச்சரியம்!




சில வெளவால்கள் 7 மாதங்களுக்குக் 'குளிர் கால உறக்கத்தில்' ஆழ்ந்து விடுகின்றன. அப்போது அவற்றுக்கு இரை கிடையாது. உடலில் சேமித்து வைக்கப் பட்டிருக்கும் கொழுப்பே உயிர் வாழச் சக்தியைக் கொடுக்கிறது.
எப்போதும் ஒரு நிமிடத்திற்கு 200 தடவைகள் சுவாசிக்கும் வெளவால், இந்தச் சமயத்தில் 20 தடவை கள் மட்டுமே சுவாசிக் கும். அதன் உடலின் வெப்பநிலை 104° F என்பது குறைந்து, 42° F என்று ஆகிவிடும்!






வெளவால்களால் நடக்க முடியாது. ஆனால், ஆப்பிரிக்கக் காடுகளில் உள்ள ஓர் இன வெளவால்கள் நடந்தும் செல்கின்றன!



வியாபாரம்!
கதை: இராக விஜயா, நெய்வேலி
படம்: சுமன்
கந்தன் ஸ்வீட்ஸ்
கந்தன் ஸ்வீட்ஸ்
ஸ்வீட்ஸ்
கந்தன் கடை பலகாரங்கள் தரமும் ருசியும் கொண்டவை. எப்போதும் வாடிக்கையாளர்கள் கூட்டம்.. கந்தனுக்கு நல்ல வியாபாரம். அருகிலுள்ள மகேந்திரனின் ஸ்வீட் ஸ்டாலில் வியாபாரம் அதிகம் இல்லை.
கந்தன் ஒருநாள் கடை வாசலில் நாயைக் கட்டி வைத்தார்.
நம் கடையில் ஏன் கூட்டம் குறைந்து விட்டது?
நானும் நல்ல நெய்யில்தான் பலகாரங்கள் செய்கிறேன். திடீரென்று ஏன் வாடிக்கையாளர்கள் குறைந்து விட்டனர்?
யாராவது கடை வாசலில் நாயைக் கட்டி வைப்பார்களா? உன் வியாபாரம் குறைந்ததற்கு அதுதான் காரணம்!



பறவைகள் பலவிதம்!

● வெண்மயில் சுமார் மூன்று முதல் ஆறு முட்டைகள் இடுகிறது.

● சிட்டுக்குருவிகளின் வாழ் நாட்கள் பன்னிரண்டு ஆண்டுகளாகும்.

● ஸ்விப்ட் லெட் என்ற பறவை வாயில் சுரக்கும் பசைமூலம் கூடுகட்டுகிறது.

● பறவைகளில் மிகவும் கனமான பறவை பெங்குவின்.

● டிப்பர் என்ற பறவை நீருக்குள் நடந்து இரை தேடுகிறது.

● பார்ன் என்ற ஆந்தை தூங்கும் போது இறக்கைகளை விரித்து வைத்துக் கொண்டே தூங்கும்.

● மரங்கொத்தி பறவைகளில் 180 வகைகள் உள்ளன.

- சா. அனந்தகுமார்,
அகஸ்தீஸ்வரம்



ரயிலில் இருந்த பயணிகள்

I. 1. 10 குரங்குகள் 10 வாழைப் பழத்தைத் தின்பதற்கு 10 நிமிடங்கள் எடுத்துக் கொள்கின்றன என்றால் 5 குரங்குகள் 5 வாழைப் பழத்தைத் தின்பதற்கு எவ்வளவு நேரம் ஆகும்? எத்தனை குரங்குகள் 60 பழங்களை 60 நிமிடத்தில் உண்ணும்?

2. ஒரு ரயிலில் சில பயணிகள் உள்ளனர். முதல் நிறுத்தத்தில் 50% பயணிகள் இறங்கி விட்டனர். 25% பயணிகள் ஏறுகின்றனர். இரண்டாவது நிறுத்தத்தில் 50% பயணிகள் இறங்கி விடுகின்றனர். 25% ஏறுகின்றனர். இப்பொழுதுள்ள மொத்தப் பயணிகளின் எண்ணிக்கை 450 எனில் ஆரம்பத்தில் ரயிலில் இருந்த பயணிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

- பி.சுவாமிநாதன்,
சென்னை



II. பஞ்சிலே திரிக்காத திரி; தறியிலே நெய்யாத பட்டு; கொம்பிலே எடுக்காத தேன் - அவை என்ன?

(குறிப்பு: விடை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வார்த்தை; மூன்று வார்த்தைகளும் சேர்ந்து அர்த்தமுள்ள ஒரு வாக்கியமாக அமையும்.)

- இ.லக்ஷ்மி ப்ரியா,
மூன்றாம் வகுப்பு,
ஜி.ஆர்.டி. சிபிஇ
மெட்ரிக் பள்ளி,
நீலாம்பரி

III. ஒரு வெற்றிலை வியாபாரி, தன் மூன்று பிள்ளைகளிடத்திலும் ஆளுக்கு முறையே 50, 30, 10 வெற்றிலைகளைக் கொடுத்தார். மூன்று

எத்தனை?



பேரும் அவற்றை விற்று ஒரே தொகையைக் கொண்டு வர வேண்டுமென்றும் நிபந் தனை விதித்தார். ஆனால் விற்கும் விலையில் வேறு பாடே இருக்கக் கூடாது. பிள்ளைகளும் அவ்வாறே செய்தனர். அவர்கள் கை யாண்ட ஏற்பாடுதான் என்ன?

- ஆ.கீதா,
அகரம்

IV. 1. தாவரங்களின் முக் கிய நிறமி எது?

2. பாரோமீட்டரில் பயன் படுத்தப்படும் திரவம்?

3. கல்வி, கேள்விகளில் சிறந்து ஞானம் படைத்தவர் களை இப்படி கூறுவர்.

4. இந்தியாவில் மாபெரும் முதல் நில நடுக்கம் நடை பெற்ற இடம் எது?

5. சென்னைக்குக் குடிநீர் வழங்கும் ஏரி?

- எஸ்.அபிநயா,
தலைஞாயிறு

V. ஓர் ஊரிலிருந்து மற்ற ஊருக்கிடையே உள்ள ரயில் நிலையங்கள் 13. ஒரு ரயில் நிலையத்திலிருந்து மற்ற ரயில் நிலையங்களுக்குத் தனித்தனியே டிக்கெட் இருக் கும் அல்லவா! இம்மாதிரி மொத்தம் எத்தனை டிக் கெட்டுகள் இருக்கும்?

- என்.ஜரினா பானு,
திருப்பட்டினம்

விடைகள்
83ஆம் பக்கம்

பல்லிக்குப் பயந்த சிங்கராயன்!

மருதநாட்டு மாமன்னன் சிங்கராயனுக்குப் பல்லியைக் கண்டால் பயம். அரண்மனையில் எந்த ஓர் இடத்திலும் பல்லி கண்ணில் படக்கூடாது என்றும் அதை விரட்ட வென்றே வீரர்களையும் நியமித்திருந்தார்.

சிங்கராயனுக்குத் வேதவதி என்ற மகள் இருந்தாள். அவளுக்குத் திருமணம் செய்ய நினைத்த சிங்கராயன் செண்பக நாட்டு இளவரசன் செங்கண்ணனை மணமுடிக்க எண்ணி ஒருமுறை நேரில் பார்க்க ஆசைப்பட்டார்.

எனவே மகாராணி மங்கையர்கரசியுடனும் மந்திரி மணி





பல்லவனிடமும் கலந்து ஆலோசனை செய்தார்.

மங்கையர்கரசி ''மகாராஜா! நீங்கள் செண்பக நாடு சென்று இளவரசன் செங்கண்ணனைப் பார்த்து வருவதில் எனக்கு எந்த ஆட்சேபனையுமில்லை. ஆனால் நீங்கள் அங்கே சென்று பல்லியைக் கண்டு பயந்தால் நமது நாட்டின் கௌரவமும் உங்கள் கௌரவமும் என்னாவது என்றுதான் பயப்பட வேண்டியுள்ளது'' என்றார்.

''மங்கையர்கரசி, நீ கவலைப்படாதே! நமது மணிபல்லவன் எந்தப் பிரச்னையையும் சமாளிக்கும் திறனுடையவர். அவரையும் உடன் அழைத்துச் செல்கிறேன்'' என்றார் சிங்கராயன்.



நல்ல நாளில் சிங்கராயனும் மணிபல்லவனும் படை வீரர் புடை சூழ செங்கமல நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

செங்கமல நாட்டு மன்னன் பரகேசரியும் மகாராணி மஞ்சுளாதேவியும் இளவரசன் செங்கண்ணனும் மகிழ்ச்சியோடு சிங்கராயனையும் மணிபல்லவனையும் வரவேற்றனர்.

ஒருநாள் செங்கண்ணன் சிங்கராயனிடம் ''மன்னர் பெருமானே! தாங்கள் என்னோடு நகர்வலம் வந்து எமது வியாபார அங்காடிகளைப் பார்வையிட வேண்டும்'' என்றான்.

''அதற்கென்ன செங்கண்ணா! கட்டாயம் வருகிறேன்'' என்றவர் மணிபல்லவனையும் அழைத்துக்கொண்டு நகர்வலம் கிளம்பினார்.

வியாபார அங்காடிக்குச் சென்றனர். ''மன்னர் பெருமானே, இதோ இந்த வணிகர் கடையைப் பாருங்கள்! உயர்ந்த முத்து, பவளங்கள் இருக்கின்றன'' என்றான்.

சிங்கராயன் கல்லாவில் உட்கார்ந்திருந்த வணிகனைப் பார்த்தான். ''ஐயோ...பபப'' என உளறி கத்த ஆரம்பித்தார். வணிகன் பின்னாடி பெரிய பல்லி ஊர்ந்து சென்றபடி இருந்தது.

''என்ன ஏன் திடீரென கத்துகிறார்? வணிகனை வேறு கை நீட்டிக் காண்பிக்கிறார்'' என்ற செங்கண்ணன் உடனடியாக வீரர்களை விட்டு வணிகனைப் பிடிக்கச் செய்தான்.

''உண்மையைச் சொல். நீ யார்?'' என மிரட்டினான். வணிகன் ''நான் வேற்றுநாட்டு ஒற்றன். இங்கே வணிகன் வேடத்தில் தங்கி உளவு பார்க்கிறேன். மன்னர் எப்படியோ என்னைக் கண்டுபிடித்து விட்டார்'' என்றான் பயந்தபடியே.

உடனே அவனைக் காவலர்கள் இழுத்துச் சென்றனர்.

''மன்னா, எப்படி அவனை ஒற்றன் என கண்டுபிடித்தீர்கள்?'' என்றான் செங்கண்ணன். சிங்கராயன் பேந்தப் பேந்த விழித்தார். இப்போது துணைக்கு வந்தான் மணிபல்லவன். ''இளவரசே, இந்தத் தகுதி கூட இல்லாவிட்டால் மன்னர் மாமன்னராக இருக்க முடியுமா?'' என்றான்.

மன்னன் சிங்கராயன் திறமையைப் பரகேசரியும் மஞ்சுளா தேவியும் புகழ்ந்து தள்ளினர்.

இரண்டு நாட்கள் சென்றன. குளிப்பதற்காக குளிய

யார் இந்தப் பிரபலம்?



தன் கடைசி நாட்களை இவர் எண்ணிக்கொண்டிருந்த போது ஸ்பெஷல் ஆஸ்கார் விருதும் கிடைத்தது.



''அப்பா உங்களுக்கு லெட்டர் வந்திருக்கு.''

''எங்கிருந்து வந்திருக்கு?''

''போஸ்ட் மேன் கையில இருந்துதான்!''

- பூ.க. கபிலன் கணபதி

லறைக்குச் சென்று கதவை மூடி தாழிட்டார் சிங்கராயன். சுவற்றில் பெரிய பல்லி ஒன்று இங்குமங்கும் ஓடுவதைப் பார்த்தார். ''ஐயோ!'' பல்லி பயத்தால் மயங்கி விழுந்தார்.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. என்ன இது குளிக்கச் சென்ற மன்னர் இன்னும் வரவில்லையே என நினைத்த மணிபல்லவன் விரைந்து வந்து குளியலறைக் கதவைத் தட்ட பின்னாடியே பரகேசரியும் செங்கண்ணனும் வந்து விட்டனர்.

உள்ளிருந்து எந்தச் சத்தமும் வரவில்லை. உடனடியாக கதவை உடைக்க கட்டளையிட்டார் பரகேசரி.

கதவு உடைந்து திறக்க, உள்ளே சிங்கராயன் கீழே விழுந்து மயங்கிக் கிடந்தார்.

என்ன இது, எதைக் கண்டு பயந்திருப்பார் மன்னர்? அவற்றை உற்றுப் பார்த்த மணிபல்லவன் 'அடடே இதற்குத்தான் பயந்தாரா' என்று புரிந்து கொண்டான்.

அவசர அவசரமாக சிங்கராயனை அரண்மனைக்குத் தூக்கிச் சென்று பச்சிலை வைத்தியம் செய்யப்பட்டது.

'இனி மன்னனை இங்கே தங்க விடக் கூடாது. நமது நாட்டின் மானம் போயிடும். மகாராணிக்கும் பதில் சொல்ல முடியாது' என பயந்த மணிபல்லவன் உடனடியாக சொந்த நாடு போயாக வேண்டும் என முடிவு செய்தான்.

சிங்கராயனும் மணிபல்லவனும் நாடு திரும்ப ஏற்பாடு செய்யப்பட்டது.

''மகாராஜா எங்கள் நாட்டில் நீங்கள் பகைவனைப் பிடித்துக் கொடுத்ததற்காக சிறிய பரிசு! தங்கள் நாடு சென்று பிரித்துப் பாருங்கள்'' என்றான் செங்கண்ணன்.

நாடு திரும்பிய மன்னர் மகாராணி வேதவதி, மணிபல்லவன் அருகே இருக்க பரிசுப் பொருளைப் பிரித்தார். உள்ளே வைர வைடூரியங்கள் பதித்த பெரிய தங்கப் பல்லி.

''ஐயோ பல்லி'' என மயங்கி விழுந்தார் மன்னர்!

பாரதப் பூங்காவிலே பூத்து நிற்கும் மலர்கள்
பாரெங்கும் புகழ் மணக்கும் பலவண்ண மலர்கள்!
அந்நியரின் ஆட்சியிலே அடிமைப்பட்டதுண்டு
அஹிம்சை ஒன்றால் விடுதலையை நாமும் பெற்றதுண்டு!

இத்தனையும் நமக்குத் தந்த உத்தமரும் யாரோ?
பூத்திருக்கும் தோட்டத்திலே தேடிடுவோம் வாரீர்!

நாடு எனும் சோலையிலே மணம் பரப்பும் மல்லி!
நாள் முழுதும் சிரித்திருக்கும் நல்ல சூரியகாந்தி!





ரேவதி ஆன்ட்டி டைம்ஸ்

நாட்டு ஒற்றுமை காட்டுவது முல்லைப்பூவின் கொத்து!
நாம் இணைந்தால் நாடு உயரும் என்றுயர்ந்த மாம்பூ!

கரம் சேர்ப்போம் பயன் பெறுவோம் என்னும் காசித்தும்பை!
கடும் உழைப்பே உயர்வென்று காட்டிடும் செவ்வந்தி!
காலமெல்லாம் பிறருக்கென வாழ் எனும் செம்பருத்தி!
கண்களுக்கு விருந்தான மலர்கள் தந்தன மகிழ்ச்சி!

இத்தனையும் காட்டியது உத்தமரின் பெயரை!
அத்தனையும் நமக்குத்தந்த நல்ல மகாத்மா காந்தி!
இந்த நாட்டின் பெருமையினைக் காப்பது நம் கடமை!
எந்த நாளும் பாரதத்தின் புகழ் பாடுவது இனிமை!

பாரதப்பூங்காவிலே பூத்து நிற்கும் மலர்கள்
பாரெங்கும் புகழ் மணக்கப் பாடுகின்ற குயில்கள் - நாம்
பாடுகின்ற குயில்கள்! இளங்குயில்கள்! இளங்குயில்கள்!

பூங்கா!





முன்னறிவிப்பு

மைக்கேல் ஃபாரடே மின்சாரம் தொடர்பான தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டு, மின்சார மோட்டாரைக் கண்டு பிடித்த சமயம். அவரை அவரது



★ மைக்கேல் ஃபாரடே

நண்பர் கிளாஸ்டோன் என்பவர் சந்தித்தார். ''வீணாக இப்படி மின்சாரம் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டு காலத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கிறீரே! இதனால் பயன் ஏதாவது உண்டா?'' என்று கேட்டார் கிளாஸ்டோன்.

''நிச்சயம் பலன் உண்டு'' என்று சொன்ன மைக்கேல் ஃபாரடே தொடர்ந்து மெல்லிய சிரிப்போடு ''ஒருநாள் இதற்கு நீங்கள் வரியும் செலுத்துவீர்கள்'' என்றார்!

- ஜி.செல்லம்மாள்,
இராஜபாளையம்

புலவரின் அடக்கம்!

பொய்யாமொழிப் புலவர் ஒருசமயம் சோழ மன்னருடன் உரையாடிக் கொண்டிருந்த போது அவரை மன்னர், ''புலவரே'' என்று அழைத்தார். உடம்பில் மின்சாரம் பாய்ந்ததுபோல் அதிர்ந்த புலவர், ''என்னையா புலவர் என்று அழைத்தீர்கள்?'' என்று பதற்றத்துடன் கேட்டார். தாம் புலவரை ஏதோ மரியாதைக் குறைவாக அழைத்து விட்டோமோ என்று எண்ணிய மன்னர், ''மன்னியுங்கள். நான் நா தவறி தங்களைப் புலவரே என்று அழைத்துவிட்டேன். தங்களைப் புலவர் பெருமானே என்று அழைத்திருக்க வேண்டும்''

புத்தகங்கள்

என்று பணிவுடன் கூறினார்.

புலவரோ, ''மன்னா! மீண்டும் ஒருமுறை அப்படி கூறாதீர்கள். பாரதம் பாடிய புலவர் பெருந்தேவனார், முப்பால் உரைத்த புலவர் திருவள்ளுவர், தமிழ் முனிவர் அகத்தியர் ஆகியோரைப் புலவர் என்று அழைக்

கும் தங்கள் வாயால் என்னையும் புலவர் என்று அழைப்பது தகுமோ? அப்படி அழைத்தால் உலகமே அதைப் பொறுக்காது மன்னா!'' என்றார் அடக்கத்துடன். புலவரின் அடக்கத்தைக் கண்டு மன்னர் மெய்சிலிர்த்தார்.

- மு.பெரியசாமி, விட்டுக்கட்டி

என்னால் முடியவில்லை...

எம்பிடோகல் ஒரு பெரிய தத்துவஞானி. அவரைச் சந்தித்த ஓர் இளைஞன் ''மிகப் பெரிய அறிவாளிகளோடு பழகிப் பழகி, பேசிப் பேசி என்னுடைய அறிவு பெருகிவிட்டது. நானும் ஓர் அறிவாளியாகிவிட்டேன்'' எனக் கூறினான்.

அதைப் பொறுமையாகக் கேட்ட தத்துவஞானி ''நான் பெரும் பணக்காரர்களோடு பழகியும் பேசியும் வருகிறேன். ஆனால் என்னால் பணக்காரனாக முடியவில்லையே!'' என்றார்.

- மு. இராஜேந்திரன், க. தருமத்துப்பட்டி

பயணத்தில் படிப்பு!

ஜி.டி. நாயுடுவுக்குப் புத்தகங்கள் படிக்கும் ஆர்வம் நிறைய இருந்தது. படிக்க வேண்டிய புத்தகங்கள் அதிகமாகிவிட்டால் அவற்றைப் படித்து முடிப்பதற்கென்றே ரயிலில் பிரயாணம் செய்வார். ரயில் பிரயாணத்தினால் பிறருடைய தொல்லைகளின்றி நிறையப் புத்தகங்களைப் படிக்க முடிகிறது என்பார். கிட்டத்தட்ட 20,000 புத்தகங்களைப் படித்துவிட்டு அவற்றைத் தமது நூலகத்தில் வைத்திருந்தார் ஜி.டி. நாயுடு.

- எஸ்.ஆறுமுகம், கழுகுமலை

* ஜி.டி.நாயுடு



பழக்க சிறந்த வழி!



யார் குற்றவாளி?

கந்தன், ரங்கன் இருவரும் விவசாயிகள். இருவரும் தங்களது தோட்டத்தில் தர்பூசணி பயிர் செய்திருந்தனர். மேலும் தோட்டத்தைச் சுற்றி ஏராளமான தென்னை மரங்களும் இருந்தன.

கந்தன் ஓர் உழைப்பாளி. எனவே, அவனது தோட்டத்தில் அவனது உழைப்பிற்கேற்ப ஏராளமான தர்பூசணிப் பழங்கள் விளைந்திருந்தன. ஆனால், ரங்கனோ கந்தனுக்கு எதிர்மாறானவன். எனவே, ரங்கன் கந்தனை விட அதிக நிலம் பெற்றிருந்தும் அவனால் அந்த விளைச்சல் காண இயலவில்லை. இதனால் ரங்கன் கந்தன்மேல் பொறாமை கொண்டிருந்தான். எனவே கந்தனைப் பழிவாங்க ரங்கன் சமயம் பார்த்துக் காத்திருந்தான்.

கந்தன் இரட்டை மாட்டு வண்டி வைத்திருந்தான். அதில்



ஸ்ரீரா.ரவிவர்மன்



ஒரு மாட்டிற்கு உடல்நிலை சரியில்லை. கந்தன் ரங்கனிடம் சென்று, ''ரங்கா! எனது ஒரு மாட்டிற்கு உடல்நிலை சரியில்லை. உனது ஒற்றை மாட்டு வண்டியைத் தருவாயேயானால் எனது ஒரு மாட்டை அதில் பூட்டி, தர்பூசணி பழங்களைச் சந்தைக்கு கொண்டு சென்று விற்று வருவேன்'' என்றான்.

கந்தனைப் பழி வாங்க இதுதான் சமயம் என்று ரங்கன் நினைத்தான். எனவே ரங்கன் கந்தனிடம், ''கந்தா! நான் உனக்கு இந்த உதவிக்கூடவா செய்ய மாட்டேன். இதோ மாட்டு வண்டியை ஓட்டிச் செல்'' என்றான்.

கந்தன் தர்பூசணிப் பழங்களை மூட்டையாகக் கட்டியிருந்தான். அதை ரங்கனின் ஒற்றை மாட்டு வண்டியில் ஏற்றிவிட்டு, தனது மாட்டை ஓட்டி வர தொழுவத்திற்குச் சென்றான்.

ரங்கன், தனது மாட்டை வண்டியில் பூட்டி கந்தனுடைய

தர்பூசணிப் பழங்களைச் சந்தைக்கு கொண்டு சென்றான்.

திரும்பி வந்து பார்த்த கந்தன் தனது தர்பூசணிப் பழ மூட்டையும் ரங்கனும் இல்லாததைக் கண்டு அதிர்ந்தான். கந்தன் நீதிபதியிடம் சென்று முறையிட்டான்.

ரங்கன் வரவழைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டான்.

''ஐயா! கந்தன் பொய் கூறுகிறான். அவன் என்னிடம் வந்து அவனது தர்பூசணிப் பழங்களைக் கொண்டு செல்ல வண்டி கேட்டான். ஆனால் என்னுடைய தர்பூசணிப் பழங்களைச் சந்தைக்கு கொண்டு செல்ல இருப்பதால் என்னால் வண்டி தர இயலாது என்றேன். எனவே, கந்தன் என் மேல் கோபங் கொண்டு பொய்யான வழக்குத் தொடுத்துள்ளான்'' என்றான் ரங்கன்.

நீதிபதிக்கு யார் சொல்வது உண்மையென்று விளங்கவில்லை. எனவே, பிரச்னைக்குள்ளான தர்பூசணிப் பழ மூட்டை கொண்டு வரப்பட்டது. அது இன்னும் பிரிக்கப்படவில்லை. பழ மூட்டையைப் பார்த்த நீதிபதி, அடுத்த நாள் தீர்ப்பு கூறுவதாகக் கூறினார்.

அன்று இரவு நீதிபதி இருவரைப் பற்றியும் ரகசியமாக ஊரில் சென்று விசாரித்தார். நீதிபதிக்கு யார் சொல்வது உண்மையென்று ஓரளவுக்குப் புரிந்தது.

அடுத்தநாள் -

''கந்தா, ரங்கா நீங்கள் இருவரும் தர்பூசணிப் பழ மூட்டை தங்களுடையது என்கிறீர்கள். ஆனால், அந்த மூட்டை உங்களில் யாருடையதாகவும் இருக்க முடியாது. ஏனெனில் அதில் இருந்தது தர்பூசணிப் பழங்கள் அல்ல, தேங்காய்கள். நீங்கள் செல்லலாம். அந்த மூட்டை யாருடையதென்று விசாரித்து உரியவரிடம் நான் ஒப்படைத்து விடுகிறேன்'' என்று நீதிபதி கூறினார்.

''ஐயா, அதில் தேங்காய்கள் இருக்க வாய்ப்பே இல்லை. ஏனெனில் அதில் தர்பூசணிப் பழங்களைக் கட்டியவன் நான். எனவே, தர்பூசணிப் பழங்கள் உடைய அந்த மூட்டையை

யார் இந்தப் பிரபலம்?



இயக்கம் மட்டுமல்ல, சிறந்த இசையமைப்பாளரும்கூட. தனது பெரும்பாலான திரைப்படங்களுக்கு இவரே இசையமைத்திருக்கிறார்.

என்னிடமே ஒப்படைத்து விடுங்கள்'' என்றான் கந்தன்.

''இல்லை. அதில் தேங்காய் மூட்டைகள்தான் உள்ளன. நான்தான் மறந்துபோய் தர்பூசணி என்று கூறிவிட்டேன்'' - ரங்கன்.

''அப்படியென்றால் நீதான் குற்றவாளி என்று ஒப்புக் கொள்கிறாயா?'' என்றார் நீதிபதி.

அதிர்ந்த ரங்கன், ''என்னது நான் குற்றவாளியா! இங்கிருக்கும் தேங்காய் மூட்டை என்னுடையது இல்லையா?'' என்றான்.

''தேங்காய் மூட்டைதான் உன்னுடையது. ஆனால், இங்கிருப்பது தர்பூசணிப் பழ மூட்டையல்லவா! தர்பூசணிப் பழ மூட்டையைத் தேங்காய் மூட்டை என்று கூறிய நீ குற்றவாளிதானே!'' என்றார் நீதிபதி.

''ஐயா, நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? எனக்கு ஒன்றுமே புரியவில்லை'' என்றான் கந்தன்.

''கந்தா, இங்கிருப்பது உண்மையிலேயே தர்பூசணிப் பழ மூட்டைதான். யார் குற்றவாளி என்று கண்டுபிடிப்பதற்காகவே இங்கிருப்பது தேங்காய் மூட்டை என்றேன்.''

''கந்தா! மூட்டை உன்னுடையது என்பதால், நீ இங்கிருப்பது தர்பூசணிப் பழ மூட்டை என்று உறுதியாகக் கூறினாய். ஆனால், ரங்கன் பொய் கூறியதால் அவனுக்கு இங்கிருப்பது தர்பூசணிப்பழ மூட்டையா, தேங்காய் மூட்டையா என்று சந்தேகம் வந்து



''டாக்டர் புத்திசாலிகளுக்கு ஞாபக மறதி வராதுன்னு சொல்றாங்களே அது உண்மையா?''

''அதை வக்கீல்கிட்ட கேட்டா எப்படி? டாக்டர்கிட்டே கேளுங்க!''

- மா. கண்ணன், இராஜபாளையம்

விட்டது. எனவே, நான் இங்கிருப்பது தேங்காய் மூட்டை என்றதும் அவனும் தன்னுடையது தேங்காய் மூட்டைதான் என்றான். எனவே, அவன்தான் குற்றவாளி என்பதை...'' நீதிபதி முடிக்கவில்லை.

''ஐயா! என்னை மன்னித்து விடுங்கள். கந்தன் என்னைவிட அதிக விளைச்சல் காண்கிறானே! என்று பொறாமை கொண்டு இவ்வாறு செய்து விட்டேன். இனிமேல் இவ்வாறு செய்ய மாட்டேன்'' ரங்கன் நீதிபதியிடம் வேண்டினான்.

நீதிபதி தர்பூசணிப்பழ மூட்டையை கந்தனிடம் ஒப்படைத்தார். ரங்கன் பொய் வழக்கு தொடுத்ததால் அவனுக்கு ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தார்.





குறுக்கெழுத்துப் புதிர்

இடமிருந்து வலம் :

1. ராமனின் பாதகாணிக்கையை வைத்து ஆட்சி செய்தவர். (4)

4. ஆயக் ______கள் 64 (2)

7. நாகப்பட்டினத்தை ______ என்றும் அழைப்பர் (2)

8. பொன்னியின் செல்வனைப் படைத்தவர் (3)

12. நாவினால் சுட்ட ______ ஆறாது (2)

13. எல்லாக் கோயில்களும் இதை மையமாகச் சுற்றி வருகின்றன. (4)

வலமிருந்து இடம் :

2. பருப்புகளில் அடங்கியிருப்பது (4)

3. நம் முன்னோர் ______ க்கு அஞ்சுவர் (2)

5. பசையை ஆங்கிலத்தில் இப்படி அழைப்பார்கள் (2)

9.பூக்களை இதிலும் தொடுப்பர் (2)

10.குழல் இனிது, ______ இனிது என்பார்... (2)

11. பாதுகாப்பு என்னும் பொருளைத் தரும் இரண்டெழுத்து சொல் (2)

14. வீடு (4)

மேலிருந்து கீழ் :

1. நாட்டியக் கலைகளில் இந்தக் கலை சிறந்த கலை என்று கூறுவார்கள் (4)

2. பொன்னகை வேண்டாம்; ______ போதும் (4)

6. ஆயிரக்கணக்கான கண்டுபிடிப்புகளைச் செய்த விஞ்ஞானி. இவர் பெயரில் முதல் சொல்லும் கடைசிச் சொல்லும் இல்லை (3)

11. தாத்தா, பாட்டி தம் ______ களைக் கொஞ்ச ஆசைப்படுவார்கள். (3)

12. முனிவர்கள் கடுந்தவம் இருந்து இதைப் பெற்றார்கள். (3)


கீழிருந்து மேல் :

3. நேர்மையுடன் உழைத்தால் ______ கிடைக்கும் (3)

4. கனவு காணுங்கள், திட்டமிடுங்கள், செயல்படுங்கள் என்று கூறியவர் ______ (3)

13. நன்றாக இருக்கிறது என்பதை ஆங்கிலத்தில் எப்படி கூறுவோம்? (4)

14. உலக மக்கள் தொகையில் இரண்டாம் இடத்தில் இருப்பது (4)



- அ.ம. பர்ஜானா, சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி, செஞ்சி

விடை 83-ஆம் பக்கம்

விளையாட்டு அரங்கம்

தொடரும் தோல்விகள்...

தடகளம்

கொரியாவில் இன்ஜியானில் 16வது ஆசிய தடகள சாம்பியன் போட்டிகள் நடந்து முடிந்துள்ளன. இதில் 4 தங்கம் உட்பட 13 பதக்கங்களைக் கைப்பற்றி இந்தியா நான்காவது இடத்தைப் பிடித்திருக்கிறது.

நீளம் தாண்டுதலில் அஞ்சு பாபி ஜார்ஜ் தங்கம் வென்றார்.

உலகத் தடகளப் போட்டியிலும் அஞ்சு ஜார்ஜ் வெள்ளி வென்று சாதனை படைத்துள்ளார்.



• சானியா



• யுவராஜ் சிங்



• அஞ்சு ஜார்ஜ்

கிரிக்கெட்

ஜிம்பாப்வேயில் இந்தியா, நியூஸிலாந்து, ஜிம்பாப்வே இடையில் முத்தரப்பு கிரிக்கெட் போட்டிகள் நடந்து முடிந்துள்ளன. இதில் இந்தியாவும் நியூஸிலாந்தும் இறுதிப் போட்டியில் மோதின. முதலில் ஆடிய இந்திய அணி 276 ரன்களுக்கு ஆட்டம் இழந்தது. முகம்மது கைஃப் ஆட்டமிழக்காமல் 93 ரன்கள் அடித்தார். வீரேந்தர் சேவாக் 75



• நாதன் ஆஸ்ட்லே

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு!

ஆகஸ்ட் இதழில் அறிவித்த போட்டியில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். பெரும்பாலானவர்கள் சரியான விடைகளையே அளித்திருந்தனர். சரியான விடையளித்தவர்களிலிருந்து 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



சரியான விடை :

1. ராஜாரவிவர்மா, 2.ஆம், 3.சரி, 4.ஆம், 5.சரி

1.குருதுவாரா, 2.பத்ரிநாத், 3.கோமதீஸ்வரர், 4.சூரியக் கோயில், 5.மதுரை மீனாக்ஷி, 6.பூரி

பரிசு யாருக்கு?

1. எஸ்.ரேஸ்மா, மாதனூர், வேலூர் மாவட்டம்

2. ச.லக்ஷ்மிகாந்த், வி.மருதூர், விழுப்புரம் மாவட்டம்

3. வி.சௌம்யா, பழைய விளாங்குடி, மதுரை மாவட்டம்

4. ஜி.சசிக்குமார், பெருமாநல்லூர், திருப்பூர்

5. கே.சரவணன், பாலக்காடு கேரளா

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

ரன்கள் அடித்தார். பின்னர் ஆடிய நியூஸிலாந்து 48.1 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 278 ரன்களைக் குவித்து கோப்பையை வென்றது. நாதன் ஆஸ்ட்லே 115 ரன்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு உதவினார்.

இந்தப் போட்டிகளில் யுவராஜ் சிங், முகம்மது கைஃப் சிறப்பாக விளையாடினர். தொடர்ந்து இலங்கை, நியூஸிலாந்து ஆகிய அணிகளிடம் இந்தியா கோப்பையைக் கோட்டை விட்டுள்ளது.

டென்னிஸ்

யு.எஸ். ஓபன் டென்னிஸ் போட்டிகள் நியூயார்க்கில் நடந்து முடிந்துள்ளன. பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் கிம்கிளைஸ்டர்ஸ் பட்டம் வென்றுள்ளார். இந்தப் போட்டிகளில் இந்தியாவின் சானியா மிர்சா நான்காவது சுற்றுவரை முன்னேறினார் என்பது குறிப்பிடத்தக்கது. நான்காவது சுற்றில் ரஷ்யாவின் நம்பர் ஒன் மரியா ஷரபோவாவுடன் மோதினார். 6 - 2, 6 - 1 என்ற செட் கணக்கில் சானியா தோற்றாலும் பிரமாதமாக எதிர்த்துப் போராடினார். இந்த ஆண்டின் துவக்கத்தில் செரீனா வில்லியம்ஸுடன் மோதினார். தற்போது மரியாவுடன் மோதி இருக்கிறார்.

ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை ரோஜர்ஃபெடரர் வென்றுள்ளார்.



I. 800 பயணிகள். முதல் நிறுத்தத்தில் 50% இறங்கிக் கொள்ள (800x50/100=400) மீதம் இருப்பது 400 பேர். அதில் 25% ஏறிக்கொள்ள (800x25/100=200) மொத்தப் பயணிகளின் தற்போதைய எண்ணிக்கை 600 (400+200= 600). இரண்டாவது நிறுத்தத்தில் 50% இறங்க (600x50/100=300) மீதம் இருப்பது 300 பேர். அதில் 25% ஏறிக் கொள்ள (600x25/100) அவர்களின் எண்ணிக்கை 150. ஆக மொத்தம் 450. (300+150=450). ஆகவே ஆரம்பத்தில் ரயிலில் இருந்த பயணிகளின் எண்ணிக்கை 800.

II. இராத்திரி. புறப்பட்டு. வந்தேன். இராத்திரி புறப்பட்டு வந்தேன்.

III. முதல் பிள்ளை 50 வெற்றிலையை பைசாவுக்கு 7 வீதம் 49 வெற்றிலை விற்றான். மீதி 1 வெற்றிலையை 3 பைசாவுக்கு விற்றான். மொத்தம் 10 பைசா. இரண்டாவது பிள்ளை பைசாவுக்கு 7 வீதம் 28 வெற்றிலை விற்றான். மீதி 2 வெற்றிலைகள் 3 பைசா வீதம் விற்றான். மொத்தம் 10 பைசா. மூன்றாவது பிள்ளை 10 வெற்றிலையை ஒரு பைசாவுக்கு 7 வெற்றிலை விற்றான். 3 வெற்றிலைகளை 3 பைசா வீதம் விற்றிருப்பான். மொத்தம் 10 பைசா.

IV. 1.பச்சையம், 2.பாதரஸம், 3.பிரகஸ்பதி, 4.பீஹார், 5.புழல் ஏரி

V. இடையேயுள்ள நிலையங்கள் - 13. முடிவில் இருப்பது - 2. ஆக மொத்தம் ரயில் நிலையங்கள் - 15. ஓர் ஊரிலிருந்து மற்ற 14 ஊர்களுக்கு டிக்கெட் இருக்கும். ஆகவே 15 x 14 = 210 டிக்கெட்டுகள் மொத்தம் இருக்கும்.



புதிர் உலகம் விடைகள்!

குறுக்கெழுத்துப் புதிர் விடை :

1 ப	ர	த	ன்	■	ம்	த	ர	2 பு
ர	■	■	ல	■	லா	■	■	ன்
த	■	ழி	3 ப	■	4 க	லை	■	ள
ம்	5 க	■	■	6 ஆ	■	■	7 நா	கை
■	■	■	8 க	ல்	கி	■	■	■
ச்	9 நா	■	■	வா	■	■	ழ்	10 யா
ப	■	ண்	11 பே	■	12 வ	டு	■	தி
ப்	■	■	ர	■	ர	■	■	ந்
13 சூ	ரி	ய	ன்	■	ம்	ல	ல்	14 இ



கடல் குதிரையில் சவாரி செய்



கடற்கரை ஓரம் வசித்த சுண்டெலிக்குக் குதிரை மேலே ஏறி, சவாரி செய்ய வேண்டும் என்று நீண்ட நாட்களாக ஆசை.


ஒருநாள் கடற்கரை ஓரத்தில் நின்று சுண்டெலி கடலை ரசித்துக் கொண்டிருந்தது.

அப்போது கடலில் குதிரை போல் ஓர் உருவம் நீந்திக் கொண்டிருந்தது. ''அடடா! குதிரை மாதிரியே இருக்கே! ஒருவேளை குதிரைக்குட்டியாக இருக்குமோ!'' என்று நினைத்தது.

அங்கு வந்த கெண்டை மீனைப் பார்த்த சுண்டெலி ''மீனக்கா அதோ போகுதே அது குதிரைக் குட்டிதானே?'' என்று கேட்டது.

''குதிரைக் குட்டிதான். ஆனால் தரையில் ஓடற குதிரை யில்லை. கடல் குதிரை'' என்றது மீன்

''கடல் குதிரையா? அப்ப இது ஓடாதா?''



''ஓடும். ஆனால் தரையில் ஓடாது; கடலுக்குள்தான் ஓடும்.''

''ஓடினால் சரி. எங்கே ஓடினால் என்ன? ஓடுகிற குதிரையில் ஏறிப் பயணம் செய்யணும்'' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டது சுண்டெலி.

அப்போது மீன்கொத்தியும் காடையும் அங்கு வந்தன.

''அக்கா, கடல் குதிரையை உனக்குத் தெரியுமா? என்னை அறிமுகம் செய்து வையேன்'' என்றது சுண்டெலி.

மீன்கொத்தி கடல் குதிரையிடம் சுண்டெலியை அறிமுகம் செய்து வைத்தது. அன்றுமுதல் கடல் குதிரையும் சுண்டெலியும் நண்பர்களாயின.

ஒருநாள் சுண்டெலி கடல் குதிரை மேல் ஏறிக் கொள்ள, கடலுக்குள் பயணம் புறப்பட்டன. தன் நீண்ட நாள் ஆசை நிறைவேறுகிற மகிழ்ச்சியில் சுண்டெலி பாடிக் கொண்டு சென்றது.

இதைப் பார்த்த கெண்டை மீன் ''டேய், சுண்டெலியை எங்கே கூட்டிட்டுப் போறேடா? அவனைக் கரையில் இறக்கி விடுடா'' என்றது.

''நீ பேசாமல் போ. என் நண்பனுக்கு கடலைச் சுற்றிக் காட்டிவிட்டு, அப்புறம் கொண்டு போய் விடறேன்'' என்று வேகமாக நீந்தியது கடல் குதிரை.

அருகில் இருந்த மீன்கொத்தியும் காடையும் ''போகாதே, போகாதே'' என எச்சரித்தன.

சுண்டெலி!



"டாடா, பைபை" என்று சொல்லிவிட்டு வேகமாகச் சென்றது கடல் குதிரை.

"தனக்குப் புத்தியிருக்கணும். இல்லேன்னா சொல் புத்தியாவது கேட்கணும்" என்று மீன் கொத்தியும் காடையும் வருந்தின.

திடீரென்று ஓர் அலை வர, சுண்டெலி தண்ணீரில் நனைந்து, பயத்தில் கடல் குதிரையைக் கட்டிப் பிடித்தது.

தண்ணீருக்குள் சென்றால் சுண்டெலிக்கு மூச்சுத் திணறுமே என்று கடல் குதிரையும் கரைக்கு அருகிலேயே சென்றது. சிறிது நேரத்தில் வானத்தில் வட்டமிட்ட பருந்து ஒன்று தண்ணீருக்கு மேலே இறந்த எலிதான் மிதக்குது என்று நினைத்தது. பாய்ந்து வந்து எலியைக் காலால் கவ்வியது. எலியுடன் கடல் குதிரையும் வர சுமையைத் தாங்க முடியவில்லை பருந்துக்கு. மணலில் பொத்தென்று போட்டது.

இரண்டும் அடிபடாமல் தப்பித்தன. ஆனால் கடல் குதிரை மூச்சு விட முடியாமல் திணறியது.

"நண்பா, என்னைத் தண்ணீருக்குள் தள்ளு" என்றது கடல் குதிரை.

கலவரமடைந்திருந்த சுண்டெலி ஒன்றும் புரியாமல் விழித்தது.

மீன் கொத்தியும் காடையும் கடல் குதிரையைத் தண்ணீருக்குள் தள்ளிவிட்டன.

"நீங்க சொன்னதைக் கேட்காமல் எலி நண்பனைக் கூட்டிச் சென்றது எவ்வளவு தவறு என்று புரிந்து கொண்டேன்" என்று வருந்தியது கடல் குதிரை.

"எல்லாவற்றுக்கும் காரணம் என் ஆசைதான். என்னை மன்னித்து விடுங்கள்" என்றது சுண்டெலி.

"நீ ஆசைப்பட்டதில் தப்பில்லை; அதைச் சரியாக செய்யாததுதான் தவறு" என்றன மீன் கொத்தியும் காடையும்.

- வெ. பாபு,
ஒன்பதாம் வகுப்பு,
அ.உ.நி.பள்ளி,
கோட்டையிருப்பு,
சிவகங்கை மாவட்டம்

யார் இந்தப் பிரபலம்?



இவர் இயக்கிய மிகப் பெரும்பாலான படங்கள் வங்காள மொழியில் அமைந்தன.



அமெரிக்காவில் வீசிய காத்ரீனா சூறாவளியால் அதிகம் பாதிக்கப்பட்டது நியூ ஆர்லியன்ஸ் நகரம்தான். நகரமே தண்ணீரில் மூழ்கி மோசமான நிலையை அடைந்துவிட்டது. சூறாவளி வீசி ஆறு நாட்களுக்குப் பிறகுதான் மீட்புப் பணியை மேற்கொள்ள முடிந்தது. ஆயிரக்கணக்கானோர் பலியாகிவிட்டனர். நகரமே விஷ நீராக மாறிவிட்டது. பல்வேறு உலக நாடுகள் நிதியுதவி, பொருளுதவி அளித்துள்ளன.



நலம் தரும் காபி!




புற்று நோயை எதிர்த்து போராடும் 'ஆண்ட்டி ஆக்சிடெண்ட்' காய்கறிகள் மற்றும் பழங்களில் உள்ளது. ஆனால் இப்போது காபியிலும் 'ஆண்ட்டி ஆக்சிடெண்ட்ஸ்' இருப்பதாக பென்சில்வேனியாவில் உள்ள ஸ்க்ரான்டக் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜோ வின்சன் கண்டறிந்துள்ளார். மற்ற உணவுகளில் இந்த ஆண்ட்டி ஆக்சிடெண்ட்ஸ் இருந்தாலும் அவை கழிவாக ஓரளவு வெளியேறி விடுகிறது. ஆனால் காபியில் உள்ள ஆண்ட்டி ஆக்சிடெண்ட்ஸ் கரையாமல் எந்தச் சூழ்நிலையிலும் பயன் தருகிறது என்று கூறியுள்ளார். புற்று நோய் மட்டுமல்ல, டைப் - 2 டயபடீஸ், பர்கின்ஸ் நோய் போன்றவை வராமல் தடுக்கவும் காபி பயன்படுகிறது.

ஈராக்கின் பாக்தாத் நகர் அருகே காதிமியா நகரில் மதத்தலைவரின் நினைவு விழா நடைபெற்றது. இந்த விழாவில் பங்கேற்க லட்சக்கணக்கான மக்கள் பாக்தாத் நகரில் திரண்டிருந்தனர். அப்போது மனித வெடிகுண்டு தாக்குதல் நடக்கலாம் என திடீரென பரவியது புரளி. இதனால் பதற்றமடைந்த மக்கள் உயிரைக் காத்துக் கொள்ள ஓடினர். இந்தப் பயங்கர நெரிசலில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் ஆற்றில் விழுந்தும், கூட்ட நெரிசலில் சிக்கியும் இறந்தனர். ஈராக் போரை விட இது மிகவும் மோசமான சம்பவமாகக் கருதப்படுகிறது.

பட்டாம்பூச்சி வளர்க்க ஆசை!

கதை : ஸ்ரீரா ரவிவர்மன் படம் : சேகர்



சின்னா அம்மா பட்டாம் பூச்சி கிட்டி மட்டி வீடு ஐடியா தேனப்பன் பூச் செடிகள்

 வுக்குப்  கள் என்றால் உயிர்!  விடம்  களை வளர்க்க வேண்டும் என்றான். "இது முடியாத காரியம்" என்றார் . வருத்தத்துடன் இருந்த  விடம் காரணம் கேட்டது . ஆசையைச் சொன்னான் . "என்னால் உதவ இயாலது. என் நண்பன்  யிடம் உதவி கேள்" என்றது .  யிடம் சென்று தன் ஆசையைக் கூறினான் . "என்னால் உதவ முடியாது. என் நண்பன்  னைப் பார்" என்றது . ஒரு பூங்காவில் தேன் சேகரித்துக் கொண்டிருந்த  னிடம் தன் ஆசையைச் சொன்னான்.  னும் முடியாது என்று கூறிவிட்டது. வருத்தத்துடன் திரும்பிய  வுக்கு ஒரு  தோன்றியது. "நம்  டில்  வளர்த்தால் நிறையப்  கள் தேன் குடிக்க வருமே!" என்று தனக்குத்தானே கூறிக் கொண்டு,  வளர்க்கும் எண்ணத்துடன்  போய்ச் சேர்ந்தான் .





சினிமா பதிவது போல் பாடம் பதிவதில்லையே, ஏன்?

● ஆ.அருண், சாத்தான் விளை

? வெங்காயத்தை நறுக்கும் போது கண்ணிலிருந்து நீர் வருவது ஏன் ஜக்கு?

! வெங்காயத்தில் ஆலினேஸ் மற்றும் ப்ரோப்பினிசிஸ்டைன் ஸல்பாக்ஸைடு என்ற பொருள்கள் உள்ளன. வெங்காயம் வெட்டும் போது இந்த இரண்டு பொருள்களும் வேதி வினை புரிந்து ப்ரோப்பின் ஸல்பினிக் அமில மாக இருக்கிறது. இந்த அமிலம் எளிதில் ஆவியாகி காற்றில் கலந்து, நம் கண்களை அடைந்து உறுத்துகிறது. இதன் விளைவால் கண்ணீர் சுரப்பியிலிருந்து நீர் வெளியேறுகிறது அருண்.



● என்.அஜிதா, மன்னார்குடி

? பறவையினங்களில் வெளவால் மட்டும் ஏன் குட்டி போட்டு பாலூட்டுகிறது ஜக்கு?

அஜிதா, வெளவால் பறவை யினத்தைச் சேர்ந்தது இல்லை. அது பறக்கும் பாலூட்டி.

● நெ. பிரஜோற்பத்திகலை, புவனகிரி

? பல இதழ்கள் 8 ரூபாய், 10 ரூபாய் ஆகிவிட்ட நிலையில் கோகுலம் மட்டும் 6 ரூபாய்க்கு கிடைக்கிறதே ஜக்கு?

இவ்வளவு குறைந்த விலையில் கிடைக்கும் கோகுலத்தை



நீங்கள் உங்கள் நண்பர்கள், வகுப்புத் தோழர்களிடம் அறிமுகம் செய்து, அவர்களையும் கோகுலம் வாசகர்களாக்கலாமே பிரஜோற்பத்திகலை!

● எம்.சுலேகா, துறையூர்

? கிளி எவ்வளவு வருஷம் உயிர் வாழும் ஜக்கு?

சுமார் 50 ஆண்டுகள் வரை உயிர் வாழும் சுலேகா.

● காயத்ரி, நெய்வேலி

? சினிமா மனதில் பதிவது போல் பாடம் பதிவதில்லையே, ஏன் ஜக்கு?

ஆசிரியர் பாடம் நடத்துவதைக் கேட்கிறோம் அல்லது நாமே புத்தகத்தைப் பார்த்து படிக்கிறோம். ஆனால் சினிமாவை படக்காட்சிகளாகப் (விஷுவல்) பார்க்கிறோம். படிப்பதைவிட பார்க்கும் காட்சிகள் நமக்கு நன்றாகப் பதிந்து விடும். (பாடத்தையும் படமாகக் காட்டினால் எல்லோரும் நூற்றுக்கு நூறு வாங்கிவிடுவோம்!)

● வி.மீனா, காட்டுப்பாக்கம்

? என் தங்கை என்னைவிட 4 வயது சிறியவள். அம்மா, அப்பா ரெண்டு பேருக்கும் ரொம்பவே செல்லம். எப்பொழுதும் அவளைப் பற்றியே பெருமையாகப் பேசுகிறார்கள். இதனால் தங்கை மேல் கோபமாக வருகிறது. நான் என்ன செய்வது ஜக்கு?

மீனா நீங்கள் ஒன்றை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் பிறந்து நான்கு ஆண்டுகள் வரை ஒரே ஒரு குழந்தையாக மிகவும் செல்லமாக வளர்ந்திருப்பீர்கள். அம்மா, அப்பா இருவரின் அன்பும் உங்கள் ஒருவருக்கே கிடைத்திருக்கும். இப்போது உங்கள் தங்கையைப் பற்றிப் பெருமையாகப் பேசுவது போல் அப்போது உங்களைப் பற்றியும் நிச்சயம் பேசியிருப்பார்கள். இப்போது உங்கள் அம்மா, அப்பா உங்கள் இரண்டு பேருக்கும் அன்பைப் பகிர்ந்து கொடுக்கிறார்கள். எதையும் சிறியக் குழந்தைகள் செய்யும்போது அந்த விஷயம் பிரமிப்பாகவும் அழகாகவும் இருக்கும். நீங்கள் உங்கள் கோபத்தை ஒதுக்கிவிட்டு உங்கள் தங்கையின் குறும்புகளை ரசிக்க ஆரம்பியுங்கள். தங்கையைப் பற்றி உயர்வாகப் பேசுங்கள். உங்கள் பெற்றோர் உங்களை இன்னும் உயர்வாக நினைப்பார்கள் மீனா! ●

இவர்தான் அந்தப் பிரபலம்!




சத்யஜித் ரே.

- ஜி.எஸ்.எஸ்.

யாரை அழைப்பது?

கதை : எஸ்.ராஜகோபால்　　　　படம் : மகேஸ்




ஏன்?
அவர் செல்வம், இவர் வெற்றி, நான் அன்பு. எங்களில் யார் வர வேண்டும் என்பதை உன் வீட்டில் முடிவு செய்துவிட்டு, அழை.
வீட்டிற்குச் சென்று நடந்ததைக் கூறினார் கமலா.
செல்வத்தை அழைத்து வா.
வெற்றியை அழைப்பதே என் விருப்பம்.
அன்பை அழைக்கலாம் அப்பா.
அன்பு முதியவரை அழைத்தார் கமலா
அன்பு முதியவரைத் தானே அழைத்தோம். நீங்களும் கூடவே வருகிறீர்களே!
நீங்கள் வெற்றியையோ, செல்வத்தையோ அழைத்திருந்தால் மற்ற இருவர் இங்கேயே இருந்திருப்போம்.
...ஆனால் நீங்கள் அழைத்தது அன்பு. அவர் செல்லுமிடமெல்லாம் யாரும் அழைக்காமலே நாங்கள் வருவோம்.
நன்றி.



கலைந்த வெண்கேசம், ஆழ்ந்த சிந்தனையை வெளிப் படுத்தும் அகலமான நெற்றி, விளையாட்டும் களிப்பும், தேடலையும் சுட்டும் இரு விழிகள். ஐன்ஸ்டீன் என்றாலே புத்திசாலித்தனம், அறிவு கூர்மை, ஆழமான சிந்தனை இதுவே நம் மனதில் சட்டென்று தோன்றும் எண்ணம். இருபதாம் நூற்றாண்டின் முற் பகுதியில் இயற்பியல் துறையில் புரட்சிகர மாறுதல்களை ஏற் படுத்திய ஐன்ஸ்டீன் நமது பிர பஞ்சம் குறித்த மிக ஆழமான அறிவுக்கு வித்திட்டவர். ஆகவேதான் புத்திசாலித்தன மாக நடந்து கொள்பவர்களை "அவருக்கு ஐன்ஸ்டீன் என்று நினைப்பு" என்று கேலிபேசுவது உலக வழக்கு.



ஐன்ஸ்டீன் என்றால் உடனே நினைவுக்கு வருவது $E = mc^2$ எனும் சமன்பாடு. உலகிலேயே மிகமிகப் பிரபலமான கணித சமன்பாடு இது தான் என்று சொன்னாலும் மிகையாகாது. பித்தாகரஸின் தேற்றம் எனப்படும் சமன்பாடு வேண்டுமானால் போட்டிக்கு வரலாம்.

ஆனால் ஐன்ஸ்டீன் குறித்து பொதுவாக நிலவும் கருத்துகள் வேடிக்கையானவை. ஐன்ஸ்டீன் தான் அணுகுண்டு செய்தார் என்பது பலரும் கொள்ளும் ஒரு கருத்து. இது அப்பட்டமான தவறு! ஐன்ஸ்டீன் ஓர் உலக சமாதான விரும்பி என்பது மறைக்கப்படும் செய்தி.


ஐன்ஸ்டீனது $E = mc^2$ அடிப் படையில்தான் அணுகுண்டு தயாரிக்கப்பட்டது.

அணுகுண்டினால் ஏற்பட்ட பெரும் அழிவையும் அவலத் தையும் கொடூரத்தையும் கண்ட ஐன்ஸ்டீன் மனம் வெம்பினார். "எனது ஆய்வு இதற்குத்தான் பயன்படும் என்று தெரிந்திருந் தால் நான் கடிகாரம் பழுது பார்க் கும் ஒரு சாதாரண தொழிலாளி யாகவே இருந்திருப்பேன்" என மனம் வருந்திக் கூறினார்.

'இனி உலகில் யாரும் அணு குண்டு தயாரிக்கக் கூடாது. அணுவியல் சர்வதேசக் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வரப்பட வேண்டும்' என்றும் தீர்க்க தரிசனத்தோடு கூறினார் ஐன்ஸ்டீன்.

இக்கருத்தை அமெரிக்க





அவர் மறைந்து (1955) இது (2005) 50 ஆண்டுகள் பூர்த்தியான ஆண்டு. அது மட்டுமல்ல, அவரது புரட்சிகர அறிவியல் கருத்துகள் மலர்ந்த ஆண்டான 1905க்கு இது ஒரு நூற்றாண்டு விழா. ஆகவேதான் 2005ஆம் ஆண்டை சர்வதேச இயற்பியல் ஆண்டு என கொண்டாடுகிறார்கள். நியூட்டனை

சமாதானத்தை விரும்பியவர்!

அரசு ஏற்கவில்லை. ஐன்ஸ்டீன் கடைசியாக எழுதிய கடிதத்தில் உலக அமைதிக்காக உலக நாடுகள் அனைத்தும் அணு ஆயுதங்களை ஒழிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தார்.

நவீன அறிவியலை குறிப்பாக இயற்பியலை செழுமைப் படுத்தியவர், புரட்சிகரமாக மாற்றியமைத்தவர் ஐன்ஸ்டீன். அவரது வெற்றிப்பாதை ரோஜா மலர்கள் தூவப்பட்ட பாதை அல்ல. கரடுமுரடான தடைகளைத் தாண்டியவர். தேசிய வெறி, போர் வெறி, இனவெறி, லாபவெறி என பற்பல பிற்போக்குக் கருத்துகளை எதிர்த்து திடமாக நின்றவர் ஐன்ஸ்டீன்.


மிஞ்சி, விஞ்சி, அறிவியல் உலகில் பெரும் புரட்சியைப் படைத்த 1905ஆம் ஆண்டை 'ஐன்ஸ்டீனது அற்புத ஆண்டு' என வர்ணிக்கிறார்கள்.

- த.வி.வெங்கடேஸ்வரன்
'கலகக்காரர் ஐன்ஸ்டீன்',
அறிவியல் வெளியீடு,
245, அவ்வை சண்முகம் சாலை, சென்னை - 86



10 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடைகள் : 1.தேனீ, 2.பறவையின் வால், 3.வலது பக்க மஞ்சள் நிற மலர், 4.சிவப்பு நிற மலர்கள் 5.வண்ணத்துப் பூச்சிகளின் எண்ணிக்கை, 6.தவளை, 7.தரையில் உள்ள பறவையின் நிறம், 8.வயலட் பூ, 9.காய்ந்த இலைகள், 10.சூரியன்



அதிகச் சுமை!

கீதாவும் ராஜாவும் ஊரிலிருந்து விடுமுறைக்காக வந்திருந்தனர்.

சுனில் எல்லோரையும் சர்க்கஸ்க்கு அழைத்துப் போக வேண்டும் என்றான் அப்பாவிடம். உடனே அப்பா சம்மதிக்க, வேகமாகக் கிளம்பினர்.

''கைக்குழந்தை இருக்கிறதாலே பஸ்ல போறது கஷ்டம். ஒரு ஆட்டோவில் வசதியாகப் போகலாமே?'' என்றார் சுனிலின் அம்மா.

''எதுக்கு அநாவசியமாகச் செலவு பண்ணணும்? நம்ம ஸ்கூட்டரிலேயே கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணி போய்க்கலாம்'' என்றார் அப்பா.

ஸ்கூட்டரின் முன்பக்கம் சுனில், ராஜா நின்று கொண்டனர். அப்பாவுக்குப் பின்னால் கீதா உட்கார்ந்தாள். அவளுக்குப் பின்னால் அம்மா கையில் குழந்தையை வைத்துக் கொண்டு அமர்ந்தார்.

சுமை அதிகமாக அப்பா மெதுவாக வண்டி ஓட்டினார். வேகத்தடை மீது செல்லும்போது அம்மா விழுந்து விடுவேனோ என பயந்து அலறினார்.

பிரதான சாலைக்கு வரும்போது சிக்னலில் டிராஃபிக் போலீஸ் வண்டியை நிறுத்தி ''எங்கே போறீங்க?'' என்று கேட்டார்.

''சர்க்கஸ்க்கு'' என்றார்.

''நீங்களே சாலையில் சர்க்கஸ் செய்து கொண்டுதான் போறீங்க. இதைவிடப் பெரிசா சர்க்கஸில் என்ன இருக்கப் போகுது? இரண்டு சக்கர வாகனங்களில் குறிப்பிட்ட நபர்கள், எடைதான் செல்ல வேண்டும். இப்படி போவதால் உங்களுக்கும் ஆபத்து, மற்றவர்களுக்கும் ஆபத்து. நாமே விபத்தைத் தேடிச் செல்லக் கூடாது'' என்றார் டிராஃபிக் போலீஸ்.

அப்பா புரிந்து கொண்டார்.

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka